தி.ப. 4901

கருவூரார் மாந்திரீக

# அட்டமா சித்து

ஓம்

ஆசிரியர்:

களத்தூர்-அங்கமுத்து முதலியார்

அச்சிட்டவர், வெளியிட்டவர்

அமரம்பேடு-குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சகம்

சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை—1.

காபிரைட்] [விலை அணா 12

கிடைக்குமிடம்:

சரஸ்வதி புத்தகசாலை,

175, செட்டியார் தெரு, கொழும்பு.

160
அங்க
SL/PR

# புத்தக விளம்பரங்கள்

சரஸ்வதி புஸ்தகசாலை,
175. செட்டியார் தெரு, கொழும்பு.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கந்தபுராணவசனம் ரப்பு 60-திருவுருவ ஜதைப் படங்களுடன் | 12 | 0 | 0 |
| இராமாயணவசனம் ரப்பு ஜதை திருவுருவப்படங்களுடன் | 12 | 0 | 0 |
| டை கிளேஸ் | 15 | 0 | 0 |
| பெரியபுராணவசனம் ரப்பு படங்களுடன் | 6 | 0 | 0 |
| விராடபர்வம் கிளேஸ் படங்களுடன் | 5 | 0 | 0 |
| ஜோதிடப் பிரச்ஞான தீபிகை | 4 | 0 | 0 |
| சினேந்திரமாலை | 2 | 0 | 0 |
| கைத்தொழில் சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| தனிப்பாடல் மூலம் | 1 | 8 | 0 |
| வன்னியபுராணம் | 4 | 0 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை கிளேஸ் படங்களுடன் | 5 | 0 | 0 |
| அயோத்தியாகாண்டம் உரை | 6 | 0 | 0 |
| நாலாயிர திவ்யபிரபந்தம் ஆழ்வார்கள் படங்களுடன் | 10 | 0 | 0 |
| டை வடகலை | 10 | 0 | 0 |
| பெரிய ஞானநாடகம் | 4 | 0 | 0 |
| கம்பராமாயணச்செய்யுள் 2-வால்யூம் | 15 | 0 | 0 |
| வீமேசுரஉள்ளமுடையான் | 2 | 0 | 0 |
| ரோமரிஷி விஞ்சு பஞ்ச பட்சி விருத்தியுரை 3 2-பக்கங்கள் | 4 | 0 | 0 |
| திருவாய்மொழி | 3 | 0 | 0 |
| மீனாட்சி கல்யாணம் | 1 | 8 | 0 |
| மணிமந்திர வைத்திய சேகரம் | 2 | 0 | 0 |
| மஹாயான மாந்திரிக சந்திரகம் | 2 | 0 | 0 |
| புலிப்பாணி சோதிடம் [illegible] | 1 | 8 | 0 |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கணித முருகசேகரம் | 2 | 0 | 0 |
| திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் மேற்படி உரையைக் கொண்டு இயற்றிய பதவுரை விசேட உரையுடன் இலக்கண குறிப்பும் சேர்த்து ரப்பு காகிதம் | 10 | 0 | 0 |
| டை கிளேஸ் காகிதம் | 12 | 0 | 0 |
| [illegible] பதார்த்தகுண சிந்தாமணி | 8 | 0 | 0 |
| வாசுதேவ மனனம் | 3 | 0 | 0 |
| திருப்போரூர் சன்னிதி முறை கிளேஸ் | 2 | 0 | 0 |
| டை ரப்பு | 1 | 8 | 0 |
| திருவாசகம் மூலம் | 1 | 8 | 0 |
| குசேலபாக்கியானம் | 2 | 0 | 0 |
| கைவல்யம் உரை (கிளேஸ்) | 2 | 0 | 0 |
| டை (ரப்பு) | 1 | 8 | 0 |
| விநாயகர்கொத்து (ரப்பு) | 3 | 0 | 0 |
| சிவ விஷ்ணுக்ஷேத்திர விளக்கம் | 8 | 0 | 0 |
| பெண்கள் செய்குறி என்னும் சந்தனநூல் | 0 | 6 | 0 |
| களவெண்பா உரை | 3 | 0 | 0 |
| ஸ்ரீவிஷ்ணுபுராண வசனம் | 5 | 0 | 0 |
| ஸ்ரீ மஹா பக்தவிஜயம் 1-ம் பாகம் 16 தாசர்கள் அடங்கியது | 5 | 0 | 0 |
| டை 2-ம் பாகம் 20-தாசர்கள் அடங்கியது | 5 | 0 | 0 |
| சித்த சாயுஜ்யமணி 1-2-பாகங்கள் | 2 | 0 | 0 |
| 18-சித்தர் வைத்திய சில்லரைக்கோர்வை | 5 | 0 | 0 |
| பலபாட்டு 200-சில்லரைக்கோர்வை | 5 | 0 | 0 |
| சூடாமணி நிகண்டு 12-தொகுதி | 4 | 0 | 0 |



41

தி.ப.
4901

160


கடவுள் துணை

மகாமகத்துவம் பொருந்திய

கருவூரார் மாந்திரீக

# அட்டமாசித்து


கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு அன்பளிப்பாக இந்நூலை வழங்கியவர்
திரு. சி. ஆ
திருநாவு





ஆசிரியர்:
**களத்தூர் - அங்கமுத்து முதலியார்**



அச்சிட்டவர், வெளியிட்டவர்
**அமரம்பேடு-குழந்தைவேல் முதலியார்**
தெய்வமகள் விலாச அச்சகம்
நெ. 24, தாண்டவராயப்பிள்ளை வீதி,



4901



சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை—1.



காபிரைட்]



1956 [விலை அணு 12

கிடைக்குமிடம்:
சரஸ்வதி புத்தகசாலை,
175, செட்டியார் தெரு, கொழும்பு.

முதற் பதிப்பு—1956

**J. கணபதி முதலியாரிடம்**

அனுமதி பெற்றது

அ. குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாச அச்சகம்
24, தாண்டவராயப் பிள்ளை வீதி,
சௌகார் பேட்டை போஸ்டு, சென்னை—1.

## ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:— களத்தூர் - அங்கமுத்து முதலியாரால் எழுதி முடிவுபெற்ற கருவூரார் மாந்திரீக அட்டமாசித்தை ம-ா-ா-ஸ்ரீ வெண்பேடு - கோவிந்த நாயகர் குமாரர் G. நமசிவாய நாயகரிடம் கிரயத்திற்கு பெற்று 'காபி ரைட்' சுதந்திரம் நான் பெற்றிருப்பதால், பிறர் இந்நூலைப் பதிப்பித்தலும், இதை வேறு பாஷையில் மொழி பெயர்த்தலும் இதில் கண்டிருக்கிற விஷயங்களையும் அச்சிடுதல் கூடாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும். அல்லாமலும் காபி ரைட் உல்லங்கனம் செய்த குற்றத்திற்கும் உட்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
**J. கணபதி முதலியார்.**
நெ. 7, மில்லர்ஸ் ரோட், கீழ்ப்பாக்கம் சென்னை—10.

# முகவுரை

மாட்சிமை தங்கிய எனதன்பர்களே !

கடல் சூழ்ந்த நெடிய உலகமெங்கணும் புகழ்பெற்றோங்கிப் பெருமை வாய்ந்த கும்பமுனி, நந்திமுனி. போகமுனி, ஊகிமுனி, மச்சமுனி, புலிப்பாணி, கருவூரார், புஜண்டரிஷி, ரோமரிஷி, கொங்கணர். தேரையர், புண்ணாக்கீசர், சண்டிகேசர், காலங்கி நாதர், இடைக்காடர், சிவவாக்கியர், திருமூலர், பூனைக்கண்ணர் முதலிய பதினெண் சித்தர்களில் கருவூரார் என்னுஞ்சித்த மகா புருஷர் மானிடர்களுய்யும் பொருட்டுக் கிருபாநோக்கம் பாலித்து திருவாய் மலர்ந்தருளிய 'மாந்திரீக அட்டமாசித்து' என்னும் இந் நூலை எனதாசான் காசிப்பாதேசியா ரவர்களால் குருமுகூர்த்த மாய் பெற்றுக்கொண்டு இதிலுள்ள மர்மங்களைச் சற்றேக்குறைய அறிந்து இச்செய்யுள்களையும் இச்செய்யுள்களில் தோயும் வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆக்ருஷ்ணம், வித்துவேஷணம், பேதனம், மாரண முதலிய மூலமந்திரங்களையும், அந்தந்த சித்துகளுக்குரிய தகட்டினளவையும், ஆசனவகைகளையும், புட்ப வகைகளையும், உருவேற்ற மணிகளையும், முத்திரை பிடிக்கும் நேர்மைகளையும், பூஜாநைவேத்தியங்களையும் செய்யுந் திசைகளையும், உருவேற்ற இலக்கங்களையும் வசனகாவியமாக எழுதியும், அந்தந்த சித்துகளுக்குத் தக்க யந்திரங்கள் மாறியும், தனித்தனி விநாயகர் பூஜை, சுப்பிரமணியர் பூஜை, வாலை பூஜை, வயிரவர் பூஜை, தூமாவராகி பூஜை, ஆஞ்சநேயர் பூஜை, மாடன் பூஜை முதலியனவுஞ் சேர்த்து அச்சிட ஆவல்கொண்டமையால், இதில் சொற்பிழை, எழுத்துப்பிழை முதலியவைகளை நீக்கி விஷயங்களை மாத்திரம் நன்கு கவனிப்பீர்களெனக் கோருகின்றனன்.

இப்படிக்கு,

க. அங்கமுத்து முதலியார்.

உ

கடவுள் துணை

மகாமகத்துவம் பொருந்திய

# கருவூரார் மாந்திரீக அட்டமாசித்து

## விநாயகர் காப்பு

ஆதிபரம் பரையென்று மாத்தா ளென்று
மம்பரத்தி லாடுகின்ற வரூபி யென்றுஞ்
சோதிபொரு ளாய்விளங்குஞ் சொரூபி யென்றுஞ்
சொல்லவொண்ணா கம்பவொளி தீப மென்று
மாதிகுரு தில்லைநட ராஜ ரென்றும்
நாதாந்தப் பஞ்சகர்த்தாள் ரூப மென்றும்
நீதியாய் விளங்குதிரு நாமங் பெற்ற
நிராமயமா மைங்கரத்தோன் பாதங் காப்பே. (1)

## பதினெண் சித்தர்கள் துதி

காப்பிட்டு யெனதாசான் போக நாதர்
கழல்பணிந்து கும்பமுனி பாதம் போற்றி
கோப்பியமாய் நந்திமுனி பாதம் போற்றி
கோரக்கர் புலிப்பாணி பாதம் போற்றி
மூப்பற்ற புஜண்டரிஷி பாதம் போற்றி
மூலவர்க்கத் தோருடைய பாதம் போற்றி
தாப்பான தேரையர் பாதம் போற்றி
தயவுள்ள யூகிகழல் போற்றி போற்றி. (2)

போற்றினேன் மச்சமுனி புண்ணாக் கீசர்
புகழுடைய இடைக்காடர் பூனைக் கண்ணர்
சாற்றினேன் சிவவாக்கியர் சண்டி கேசர்
சார்ப்பான ரோமரிஷி சட்ட நாதர்
நாற்றிசையோர் போற்றுங்கா லாங்கி பாதம்
நன்மனதில் சிந்தித்துத் தொழுது போற்றி

பாற்றல்போ னுலகோர்கள் பிரமை தீர
பாலித்தேன் மாந்திரீக மட்ட சித்தே. (3)

## நூல் சாபம்

அட்டமா சித்தியெலா முலகத் தோர்க்கு
அடுக்கடுக்காய் யுளவினுட விவர மெல்லா
மிட்டமாய்ச் சொன்னதற்கு சித்தர் கூடி
என்மேலே சினங்கொண்டு நூலுக் கப்பா
கட்டளையா யிட்டாரே சாபந் தன்னைக்
கடுகெனவே கும்பமுனி யடியிற் றாழ்ந்து
திட்டமுட னிட்டதொரு சாபந் தன்னை
தீரென்றேன் குருமுனியை வேண்டி தானே. (4)

## சாப நிவர்த்தி

வேண்டிநின்ற வெளியின்மேல் கிருபை வைத்து
வேதாந்த சற்குருவுஞ் சாப மெல்லா
கூண்டோடே போக்கிடவே வருளு மீய்ந்து
குழந்தாய்நீ யஞ்சாதே யென்று மேதான்
ஆண்டவனு மெந்தனுக்கு ஆசி கூறி
அருளான சிவயோக மதனில் நின்றார்
ஈண்டேசெய் தனைப்போல நூலைப் பெற்றேன்
இஷ்டனென்று வுந்தனுக்கா யியம்புவேனே. (5)

## சீடனுக்கு புத்தி கூறல்

இயம்புவேன் மாணாக்கா விந்த நூலை
வெளிதாக வெண்ணாதே கைபாகந் தான்
சயமாகு மெடுத்ததோர் கரும மெல்லாந்
தப்பாது கேசரம்போற் கூறு மல்லோ
வயமான மகாமந்திர மிதுதா னாகும்
நாடாது பேய்பில்லி சூனி யங்கள்
லயமாகு முன்மனதைப் பொன்போ லாக்கும்
லகானல்லோ வகாரவீட்டை யுன்னிப் பாரே. (6)

உன்னிப்பார் சந்திரனை யடக்கி மெள்ள
ஓகோகோ சூரியனில் நின்று கொண்டு



கன்னியமா யான்சொல்லு மட்ட சித்துங்
கருவாகக் கணக்குடனே யாடிப் பாரு
சொன்னமொழி தவறாது விந்தப் போக்கு
சொகுசாக விருக்குமடா சொர்ண பாலா
தன்னியனாய்ப் போவாயே சாங்க மாக
தாரணியில் பொய்க்கோபங் களவைத் தள்ளே. (7)

தள்ளுவாய்க் காமங்கள் சூது மார்க்கந்
தன்னுயிர்போல் மன்னுயிரைக் காக்கவேணும்
கள்ளரடா காசியிலே யனேகம் பேர்கள்
கழறாதே கருமிகட்கு விந்த நூலை
தெள்ளியதோர் பாலாயென் சீலா கேளு
தேவிமனோன் மணியாளை யிதயத் தெண்ணி
விள்ளுவேன் மாந்திரீக மட்டசித்தை
விவரமாய்க் கருத்துவைத் துகந்து கேளே. (8)

## நூல் விவரம்

கருத்துவைத்து கேட்பாயே கண்ணே சொல்வேன்
கனகமா மைந்தெழுத்தி னட்ட சித்தும்
பொருப்பான வைந்தெழுத்தி லைந்து பீஜம்
புகட்டுவே னுந்தனுக்கா யின்னங் கேளு
வருத்தமில்லை யக்கரத்தின் பீடஞ் சொல்வேன்
வகையாக யந்திரத்தி னளவுஞ் சொல்வேன்
கருத்தாக சித்துக்குந் திக்கு சொல்வேன்
கலங்காதே மணியோடு பூஜை கேளே. (9)

பூசைகேள் புட்பவகை யாச னங்கள்
புகலுவேன் முத்திரைகள் பிடிக்கு நேர்மை
ஆசையாய் முலபீ ஜங்க ளெல்லாம்
அறைகுவே னுருவேற்று மிலக்கஞ் சொல்வேன்
மீசையுளோய் தீவாரா தனையின் போக்கும்
மிக்கான நைவேத்தி யங்கள் சொல்வேன்
காசினியி லென்னைப்போ லாருஞ் சொல்லார்
கழறுவே னடுக்கடுக்காய் விவரந் தானே. (10)

## வசியச்சித்து

தானேதா னறுவரை நேரே கீறி
தன்மையா யாறுவரை குறுக்கே கீறி
கோனேகே ளிருபத்தைந் தறையு மாச்சு
கொற்றவனே யறைதோறும் பீடங் கேளு
தேனேபார் முதலறையில் முக்கோ ணந்தான்
தெளிவாக மறுவறையில் நாற்கோ ணந்தான்
மானேகே ளடுத்ததோ ரண்டை வீட்டில்
மயக்கமின்றி வட்டமதைப் போடு போடே. (11)

போடேநீ யடுத்தவறை யைங்கோ ணம்பார்
பொன்னவனே யறுகோண மடுத்த வீடு
நாடேநீ நடுவணையைப் பிடித்து மாறு
நாயகனே வறைதோறும் மாறிக் கொள்ளு
வாடாதே வயநமசி யென்று போடு
வகையாக நடுவணையை முன்போல் மாறு
தேடாதே வகாரத்தில் றீயும் போடு
தெளிவாக யகாரத்தில் ஸ்ரீயும் போடே. (12)

ஸ்ரீயும் போட் டானவுடன் சொல்லக் கேளு
திகழான நகாரத்தில் ஐயும் போடு
நீயுமே மகாரத்தில் கிலியும் போடு
நேர்மையாய் சிகாரத்தில் சௌவும் போடு
வாயுள்ளோய் எ-ஒ-அ-இ-உ போடு
வகாக வகாரத்தில் லம்தா னையா
ஆயுள்வள ரெண்சீஷா வருக்கக் கேண்மோ
அப்பனே யகாரத்தில் சௌவும் போடே. (13)

போட்டவுடன் நகாரத்தில் ஐம்தா னப்பா
பொன்னவனே மகாரத்தில் ஈம்தான் போடு
நாட்டுவாய்ச் சிகாரத்தில் நமதா னையா
நலமாகப் போட்டுமல்லோ நவிலக் கேளு
தாட்டிகமா யிவையெல்லாம் கோர்வை யாக
தப்பாம லறைதோறும் வரைந்து கொண்டு
காட்டுவேன் நடுவணையை முன்போல் மாறு
கருத்தாக வறைதோறு மிப்படியே மாறே. (14)



மாறிவிடு சொல்லுகிறே னந்த வீட்டில்
மயங்காதே யிலக்கமது வைம்பத் தொன்று
தேறிவிடு முதல்வீட்டில் பதினைந்தையா
தெளிவாக மறுவீட்டில் பனிரெண்டாகும்
கீறிவிடு மொன்பதா மண்டை வீட்டில்
கீர்த்தியுளோர் மறுவீடு பதினொன் றாகும்
கூறினேன் மறுவரையில் நால தாகும்
கொற்றவனே மாறிடுவாய் மனோநா லாமே. (15)

நாலாவ தணைபிடித்து மாறிக் கொள்ளு
நயமாக விப்படியே யறைக டோறும்
மேலான புத்திகொண்டு மாறல் கண்டு
மேன்மையாய்த் தானடைக்க யந்திரந்தான்
பாலாகத் தோயுமல்லோ மகிமை மெத்த
பாருலகி லுனக்கீடு சொல்லப் போமோ
காலான கால்கண்டு நின்று பூசி
கைகண்ட வசியமடா யின்னுங் கேளே. (16)

## பூஜை செய்யும் விதி

கேளப்பா கீழ்திசையில் புலித்தோ லப்பா
கொடியான வாசனத்தில் வீற் றிருந்து
நாளப்பா போக்காது ருத்திர மாலை
நாயகனே செபஞ்செய்வாய் மலரோ மல்லி
ஆளப்பா சதாசிவம்போ லிருந்து கொண்டு
அடைவாகப் பூசிக்க வசிய மாகும்
கேளப்பா கோர்வையதாய்க் கழறிப் போட்டேன்
கண்மணியே கலங்காதே யாடிப் பாரே. (17)

## வசிய மூலமந்திரம்

ஓம் றீயும், ஸ்ரீயும், ஐயும் கிலியும், சவ்வும், வயநமசி சர்வ லோக சிவவசியா-சுவாஹா (உருவு லட்சம்) பூஜை-பால், பழம், சர்க்கரை, அவல்கடலை, சத்தி, முத்தி, தேங்காய் மாவிளக்கு முதலியவைகளாம்.

# வசிய யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வ-லம்<br>எ-றீயும்<br>15 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>12 | ந-ஐயும்<br>அ-ஐயும்<br>9 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>11 | சி-நம்<br>உ-சவ்வும்<br>4 |
| ந-ஐம்<br>அ-ஐயும்<br>11 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>4 | சி-நம்<br>உ-சவ்வும்<br>15 | வ-லம்<br>எ-றீயும்<br>12 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>9 |
| சி-நம்<br>உ-சவ்வும்<br>12 | வ-லம்<br>எ-றீயும்<br>9 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>11 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>4 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>15 |
| ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>4 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>15 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>12 | சி-நம்<br>உ-சவ்வும்<br>9 | வ-லம்<br>எ-றீயும்<br>11 |
| ம-ஈம்<br>இ-கிலியும்<br>9 | சி-நம்<br>உ-சவ்வும்<br>11 | வ-லம்<br>எ-றீயும்<br>4 | ய- சௌ<br>ஓஸ்ரீயும்<br>15 | ந-ஐயும்<br>அ-ஐம்<br>12 |

மேற்கூறிய யந்திரத்தை ஐந்தங்குல அகலமுள்ள காரீயத் தகட்டில் வரைந்து அபிஷேக முதலியதுஞ் செய்து மல்லிகை மலரைச் சாற்றி சற்குருவாகிய கருவூராரென்னும் மகா சித்த புருஷரை இதயத்தெண்ணி புலித்தோலாசனமிட்டு கீழ்த்திசையி லுட்கார்ந்து உருத்திராட்ச மணியால் பரிசுத்தமாய் உருவோத: மகா பெருமைவாய்ந்த பஞ்சாக்கிரம சித்தியாகுமென்று இந் நூலாசிரியர் கூறியிருக்கின்றனரென் றறியவும்.

அன்றி மேற்கூறிய இருபத்தைந்து அறையுள்ள யந்திரத்தில் முதல் வீட்டில் நாற்கோணம், இரண்டாவதறையில் முக்கோணம், மூன்றாவதறையில் வட்டம், நான்காவது வீட்டில் ஐங்கோணம், ஐந்தாவது வீட்டில் அறுகோணமாகப் போட்டு மூன்றாவதணையை அறைகடோறும் பிடித்து மாறியபின் பீஜங்களை அடைக்கவும்

ஆடியப்பா ரதிசயமா மிந்தப் போக்கு
அவனியிலே கிடையாது சொன்னேன் சொன்னேன்
தேடிப்பார் செகமெங்குங் கிடையா தையா
செப்பினேன் சேயேநீ செம்மையாய்ப் பார்



கோடியிலே ஒருவனல்லோ அறிவா னித்தை
கோடிசித்துங் கணத்துக்கு ளாடுவான் கேள்
நாடிப்பார் பெரியோரை வணங்கி நில்லு
நவிலுவேன் மோகனந்தான் நன்றாய்த் தானே. (18)

## மோகன சித்து

நன்றாகச் சொல்லுகிறேன் முன்போ லையா
நயமாக இருபத்தைந் தறைதான் கீறி
குன்றான சிவயநம வென்று போட்டு
கொற்றவனே சிகாரத்தில் சவ்வும் போடு
பன்றான வகாரத்தில் றீயும் போடு
பாலகனே யகாரத்தில் ஸ்ரீயும் போடு
நன்றான நகாரத்தில் ஐயும் போடு
நலமான மகாரத்தில் கிலியும் போடே. (19)

போடேநீ உ-எ-ஒ-அ-இ போடு
பொலிவான நம்-லம் சௌவும் போடு
ஆடேநீ ஐம்-ஈம் தானே போடு
அரகரா மூன்றாவ தணை பிடித்து
ஓடாதே யறைதோறும் மாறிக் கொள்ளு
ஓகோகோ முதலறையில் நாலு போடு
வாடாதே மறுவறையில் பதினைந் தையா
வாகுடனே மறுவீட்டில் பனிரெண் டாமே. (20)

ஆமேதான் மறுவறையி லொன்ப தாகும்
ஆகாகா மறுவீட்டில் பதினொன் றாகும்
ஆமேதா னடுவணையைப் பிடித்து நீயும்
யப்பனே யறைதோறு மாறிக் கொள்ளு
ஆமேதான் முதலறையில் கோண மாறு
அய்யனே மறுவறையில் நாலு கோணம்
ஆமேதான் மறுவீட்டில் மூன்று சோணம்
அன்பனே மறுவறையில் வட்டம் போடே. (21)

வட்டம்பின் மறுவீட்டின் கோண மைந்து
வரிசையுடன் றான்போட்டு சொல்லக் கேளு
திட்டமாய் மூன்றாவ தணையை மாறு
திறமாகும் யந்திரத்தின் பெருமை யையா
நட்டமில்லை யான் சொன்ன வபணஞ் செய்யின்
நலமான வித்தையடா நன்றாய்ப் பாரு
கட்டளையா யிட்டேனே யுன்ற னக்கு
கழறாதே மோகனத்தின் பெருமை தானே. (22)

## பூஜாவிதி

பெருமையாம் வடகிழக்கு தர்ப்பை போட்டு
பெருமாளைத் தியானித்து ஆசனத்தில்
அருமையாய் வீற்றிருந்து பூஜை செய்ய
அப்பனே படிகமணி தானு மாகும்
நறுமலரி லல்லிப்பூ சாற்ற லாகும்
நயந்துசொல்வே னண்ணிப்பா ரிந்தப் போக்கை
அறுகுதும்பை யணிந்தவர்போல் மௌனங் கொள்ள
அக்கணமே சித்தியாஞ் செய்து பாரே. (33)

## மோகன மூலமந்திரம்

ஓம்-சௌவும், றீயும், ஸ்ரீயும், ஐயும், கிலியும், மோகனுயா சுவாஹா (உருவு-10000) பூஜை பால், பழம், சர்க்கரை, தேங்காய், சுண்டல், வடை, பாயாசம் முதலியவைகளாம்.

## மோகன யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி-நம்<br>உ-சவ்வும்<br>4 | வ-லம்<br>எ-றீயும்<br>15 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>12 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>9 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>11 |
| ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>9 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>11 | ம·ஈம்<br>இ-கிலியும்<br>4 | சி-நம்<br>உ-சவ்வும்<br>15 | வ-லம்<br>எ-றீயும்<br>12 |
| ம-ஈம்<br>இ-கிலியும்<br>15 | சி-நம்<br>உ-சவ்வும்<br>12 | வ-லம்<br>எ-றீயும்<br>9 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>11 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>4 |
| வ-லம்<br>எ-றீயும்<br>11 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>4 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>15 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>12 | சி-நம்<br>உ-சவ்வும்<br>9 |
| ந-ஐயும்<br>அ-ஐயும்<br>12 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>9 | சி-நம்<br>உ-சவ்வும்<br>11 | வ-லம்<br>எ-றீயும்<br>4 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>15 |



மேற்கூறிய யந்திரத்தை பொன்தகட்டில் வரைந்து அபிஷேக முதலியனவுஞ் செய்து அலரிபுட்பம் சாத்தி குருவைத் தியானித்து தர்பாசனமிட்டு வடகிழக்கு திசையிலுட்கார்ந்து பரிசுத்த மனத்தோடு படிகமணியால் உருவேற்ற சித்தியாம்.

அன்றி இருபத்தைந்தறையுள்ள யந்திரத்தில் முதல்வீட்டில் அறுகோணம், இரண்டாவதறையில் நாற்கோணம், மூன்றாவதறையில் முக்கோணம், நான்காவதறையில் வட்டம், ஐந்தாவதறையில் ஐங்கோணமாகப் போட்டு மூன்றாவதணையை அறைகடோறும் பிடித்து மாறியபின் பூஜங்களை அடைக்கவும்.

செய்துபா ரென்னைப்போல் யாருஞ் சொல்லார்
தேவிமனோன் மணியாளைத் தியானஞ் செய்து
கைதவமா யாடிப்பார் பொய்யா தையா
கருத்தையொன்றாய்ச் சேர்க்காட்டால் மெய்யா தையா
நையாத மனிதருக்கு வுய்யா தப்பா
நடந்துகொள்ளு மியான்சொன்ன வாறு போல
பொய்யாது பூவுலகில் மெய்யாச் சொன்னேன்
புண்ணியனே தம்பனத்தின் மகிமை தானே. (24)

### தம்பனச்சித்து

தம்பனத்தின் போலுண்டோ மற்ற சித்து
தாரணியில் கோடிவித்தை யாட லாகும்
நம்புகின்றோர் தனைக்கார்க்கும் நல்ல சித்து
நலம்பெறலா முன்மனதைச் சிவத்தி லாக்கும்
அம்புவியி லன்பனென் றறைவே னையா
ஆச்சரியம் சித்தரெலா மறைத்துச் சொன்னார்
வம்பின்றி சொல்லுகிறேன் முன்போல் கண்ணே
வரைந்திடுவா யறைகளா மிருபத் தைந்தே. (25)

ஐந்தான இருபத்தைந் தறையாய்க் கீறி
வழகான வறைதோறுஞ் சூலம் போட்டு
பிந்தாமல் முதலறையில் வட்டம் போடு
பிசகாமல் மறுவறையில் ஐங்கோ ணந்தான்

சொந்தமாய் நடுவணையில் அறுகோ ணம்பார்
சுந்தரனே மறுவீட்டில் நாற்கோ ணம்பார்
பந்தமிலாய் மறுவறையில் முக்கோ ணந்தான்
பதிந்துவிடு யறைதோறும் கோணந் தானே. (26)

கோணங்க ளதனிலே சொல்லக் கேளு
கொற்றவனே நமசிவய வென்று போடு
வேணபடி ஐம்-ஈம்-நம் லம்தா னையா
வெகுசுருக்காய் சௌவும்என்ற பீஜம் போடு
நாண முடன் அ-இ--உ-ஒ-போடு
நாயகனே ஐயும் கிலியும் சௌவும் றீயும்
கோணமதில் போட்டு ஸ்ரீயும் தன்னை
கோணும விவையெல்லாஞ் சொல்லக் கேளே. (27)

சொல்லக்கேளே நடுவணையை முன்போல் மாறு
சொற்பெரிய வறைதோறும் பிடித்து மாறு
நல்லவனே முதலறையில் ஒன்ப தையா
நாடுவாய் மறுவறையில் பதினொன் றாகும்
கல்லுமாய் நடுவணையில் நால தாகும்
கழறுதே மறுவீட்டில் பதினைந் தப்பா
வெல்லுவாய்க் கடைவீட்டில் பனிரெண்டாகும்
விவரமாய் நாலாவ தணையை மாறே (28)

## பூஜாவிதி

மாறியபின் மேற்குமுகம் கிருஷ்ண சலத்தில்
மைந்தனே யாசனமா யிருந்து கொண்டு
தேற்றுவாய் சாமந்திப் புஷ்ப மாகும்
தெளிவான பவளமணி தானு மாகும்
கோறுவா யிவ்வித்தைச் சூட்ச மெத்த
கோடிபொரு ளீய்ந்தாலுஞ் செப்பி டாதே
வீறுபெரு மாய்ப்பாரு மிந்த சித்தால்
விவரமா யொவ்வொன்றுய்ச் சோதிப் பாயே. (29)

## தம்பன மூலமந்திரம்

ஓம் - ஐயும்-கிலியும்-சௌவும்-றீயும்-ஸ்ரீயும் சகல லோகஸ் தம்பனுயா சுவாஹா (உருவு 1008) பூஜை பால் பழம், சர்க்கரை, அவல், கடலை, பொங்கல், தேங்காய், சத்திமுக்தி முதலியவைகளாம்.



# தம்பன யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ந-ஐம் அ-ஐயும் 6 | ம-ஈம் இ-கிலியும் 11 | சி-நம் உ-சவ்வும் 4 | வ-லம் எ-றீயும் 15 | ய-சௌம் ஒ-ஸ்ரீயும் 12 |
| சி-நம் உ-சவ்வும் 15 | வ-லம் எ-றீயும் 12 | ய-சௌம் ஒ-ஸ்ரீயும் 9 | ந-ஐம் அ-ஐயும் 11 | ம-ஈம் இ-கிலியும் 4 |
| ய-சௌம் ஒ-ஸ்ரீயும் 11 | ந-ஐம் அ-ஐயும் 4 | ம-ஈம் இ-கிலியும் 15 | சி-நம் உ-சவ்வும் 12 | வ-லம் எ-றீயும் 9 |
| ம-ஈம் இ-கிலியும் 12 | சி-நம் உ-சவ்வும் 9 | வ-லம் எ-றீயும் 11 | ய-சௌம் ஒ-ஸ்ரீயும் 4 | ந-ஐம் அ-ஐயும் 15 |
| வ-லம் எ-றீயும் 4 | ய-சௌம் ஒ-ஸ்ரீயும் 15 | ந-ஐம் அ-ஐயும் 12 | ம-ஈம் இ-கிலியும் 9 | சி-நம் உ-சவ்வும் 11 |

மேற்கூறிய யந்திரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அபிஷேக முதலியதுஞ்செய்து சாமந்திப் புஷ்பத்தைச் சாத்தி ஆசனைத் தியானித்து கிருஷ்ணசலமிட்டு மேற்குமுக முட்கார்ந்து பரிசுத்த மனத்தோடு பவளமணியால் உருவேற்ற தம்பனம் சித்தியாகும்.

அன்றி இருபத்தைந்தறையுள்ள யந்திரத்தில் வட்டம், ஐங்கோணம், அறுகோணம், நாற்கோணம், முக்கோணமாகப்போட்டு மூன்றுவதணையை அறைகடோறும் பிடித்து மாரியபின் பீஜங்களை அடைக்கவும்.

சோதிப்பாய் தம்பனந்தான் கைகண்டாப் போல்
தோணுமடா யிவ்விதத்தை யருமை மெத்த
ஆதித்தன் போலவல்லோ பிரகா சிக்கும்
ஆகாச வாச்சரியம் தம்பனந்தான்

வாதிவயித் தர்ஞானி போற்று வார்கள்
வையகத்தி லுனைப்போல சீஷ னுண்டோ
பாதிமதி சடையணிந்த தம்பி ரானைப்
பலன்தரவே பலகாலு மேற்றி னேனே. (30)

## உச்சாடனச் சித்து

ஏற்றினேன் உச்சாடனத் சித்து கேளு
என்மகனே யிருபத்தைந் தறையி னுள்ளே
போற்றியே முக்கோணம் வட்டம் போடு
புகழ்பெரிய வைங்கோண மறுகோ ணத்தான்
பாற்றால்போல் நாற்கோணம் மரிந்து போடு
பாலகனே யமநசிவ வறைந்து போடு
நாற்றிசையோர் புகழ்பாலா நயந்து கேளு
நாட்டுவாய் சௌவும்-ஐம்-ஈம்-நம்-தானே. (31)

தானேதான் லம்என்ற பீஜம் போடு
தாழ்வின்றி ஓ-அ-இ- உ-எ போடு
கோனேகேள் ஸ்ரீயும் ஐயும் கிலியும் சவ்வும்
கொற்றவனே ரீயும் என்ற பீஜம்போடு
தேனேபா ரிவையெல்லா முன்போ லப்பா
தெளிவாக நடுவணையைப் பிடித்து மாறு
மானேவா பனிரெண்டு ஒன்ப தையா
மயங்காதே பதினொன்று நாலு போடே. (32)

போட்டுவிடு பதினைந்தா மிலக்க மைய்யா
பொன்னவனே நாலாவ தணையை மாறு
நாட்டிவிடு யான்சொன்ன வாறு போல
நளினமா முச்சாடன பெருமை யாச்சு
காட்டுவேன் கலங்காதே கண்ணே கேண்மோ
கனமான பூசையுட விவரங்கூட
மாட்டுவேன் வெகுசுருக்காய் மைந்தா மைந்தா
மகாபெருமை அருமையடா மகிழ்ந்து பாரே. (33)



## பூஜாவிதி

அருமையடா ஆசனந்தா னீலக் கம்பளம்
அறைகுவேன் வடமேற்கு பீடம் கொள்ளு
பெருமையடா வில்வமல ரதனைச் சாத்து
பேசாதே நீலமணி ஜெபத்திற் காகும்
வருமையிலை இவ்வண்ணஞ் சுருக்கு மெத்த
வாடாதே பரிபாஷை கூறவில்லை
பெருமையதாய்ச் செய்தல்லோ ஆடிப் பாரு
பொன்னுலகோ ருனக்கீடு யில்லை தானே. (34)

## உச்சாடன மூலமந்திரம்

ஓம் ஸ்ரீயும் ஐயும் கிலியும் சௌவும் ரீயும் உச்சாடனுயா சுவாஹா. (உருவு 125.) பூஜை: பால், பழம், சர்க்கரை, அவல் கடலை தேங்காய், பொங்கல். சத்திமுத்தி முதலியவைகளாம்.

(பின்பக்கம் பார்க்க)

மூலமந்திர யந்திரங்கள் அடங்கிய
மலையாள பகவதி மாந்திரீக சித்தன்
[யோக சித்தாந்த மகான் சுவாமி வடிவேல் எழுதியது]

இதில் விநாயகர் லக்ஷிமி இராஜராஜேஸ்வரி முதலிய 11-தேவதா வசியங்களும், அதற்குரிய யந்திர மந்திரங்களும், 8-வித பஞ்சாக்ஷர அஷ்டமாசித்தின் மந்திர யந்திரங்களும் 6-வித சடாக்ஷர அஷ்ட கன்ம மந்திர யந்திரங்களும், பத்துவித முனி பேய் பிசாசு தோஷம் நோய் தீர்க்கும் மந்திர யந்திரங்களும், மெஸ்மெரிஸமென்னும் மனோவசியத்தால் நடத்தும் தாரணை தூங்கவைத்தல், களவு தெரிதல், நோய் தீர்த்தல், இஷ்டார்த்த சித்தி வசியம் முதலிய நான்கு உச்சாடன விளக்கப் படங்களும், இன்னும் வர்த்தக உத்தியோக வழக்கு சத்துரு வசியங்களும், தனது சொந்த அனுபவமாக கையாண்டு வருவதையே உலக பரோபகாரமாக வெளியிட்டிருக்கிறது. இந்நூலைக் கையாளும் எந்த ஒருவரையும் கலியுக சித்தனென்றே வர்ணிக்கப்படுவார்கள். மாந்திரீக சித்தனென்றால் மற்றும் சொல்ல வேண்டுமா?

இதன் விலை ரூபா. 1-0-0.
தபால் சார்ஜ் பிரத்தியேகம்

கிடைக்குமிடம்:—

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு, கொழும்பு.

# உச்சாடன யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 12 | ந-ஐம் அ-ஐயும் 9 | ம-ஈம் இ-கிலியும் 11 | சி-நம் உ-சவ்வும் 4 | வ-லம் எ-றீயும் 15 |
| ம-ஈம் இ-கிலியும் 4 | சி-நம் உ-சவ்வும் 15 | வ-லம் எ-றீயும் 12 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 9 | ந-ஐம் அ-ஐயும் 11 |
| வ-லம் எ-றீயும் 9 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 11 | ந-ஐம் அ-ஐயும் 4 | ம-ஈம் இ-கிலியும் 15 | சி-நம் உ-சவ்வும் 12 |
| ந-ஐம் அ-ஐயும் 15 | ம-ஈம் இ-கிலியும் 12 | சி-நம் உ-சவ்வும் 9 | வ-லம் எ-றீயும் 11 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 4 |
| சி-நம் உ-சவ்வும் 11 | வ-லம் எ-றீயும் 4 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 15 | ந-ஐம் அ-ஐயும் 12 | ம-ஈம் இ-கிலியும் 9 |

மேற்கூறிய இயந்திரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து அபிஷேக முதலியனவுஞ் செய்து வில்வ மலரைச் சாத்தி வடமேற்கில் நீலகம்பளம் ஆசனங்கொண்டு நீலமணியால் உருவேற்ற உச்சாடனம் சித்தியாகும்.

அன்றி இருபத்தைந் தறையுள்ள இயந்திரத்தில் முக்கோணம் வட்டம், ஐங்கோணம், அறுகோணம், நாற்கோணமாகப் போட்டு மூன்றுவதனையை அன்றகடோறும் பிடித்து மாறியபின் பீஜங்களை அடைக்கவும்.

## ஆக்ருஷ்ணச் சித்து

இல்லையா மாக்ருஷ்ண சித்தை நன்றாய்
எடுத்துரைப்பே னிதக்கமதா யுன்ற னுக்கு
தொல்லையறு மிருபத்தைந் தறையைக் கீறி
சுந்தரனே நாற்கோணம் வட்டம் போடு



எல்லையா மறுகோண முக்கோணந் தான்
எழுதுவா யைங்கோணம் வரிசையாய்ப் பார்
நல்லதோர் வசியம வென்று மாட்டு
நயமான லம்-ஓம்-நம் சௌவும் வையே. (35)

வைப்பாயே ஈம்என்ற பீஜம் போடு
வகையாக எ-அ-உ ஓ-இ மாட்டு
கைப்பின்றி றீயும்-ஐயும் சவ்வும் ஸ்ரீயும்
சைதவமாய்க் கிலியும்என் றதனில் மாட்டு
தப்பின்றி மூன்றுவ தனை பிடித்து
சாங்கமாய் முன்போல மாறிக் கொண்டு
துப்புநே ரிதழாலே பதினைந்து போடு
துய்யாகேள் ஒன்பதாய் நாலு போடே. (36)

போடுவாய் பனிரண்டு பதினொன் றாகும்
பொங்கமுடன் நாலாவ தனையை மாறு
நீடியே யறைதோறும் முன்போல் மாறு
நீனிலத்தி லுனைப்போல வுண்டோ சித்து
வாடியே போகாதே கருவாய்ப் பாரு
வையகத்தி லாக்ருஷ்ணத்தா லுனக்கே சித்தி
கோடியிலே ஒருவனல்லோ கண்டு தேர்வன்
கோணாது கூர்ந்துபார் யிவ்வழியைத் தானே. (37)

## பூஜாவிதி

வழிகண்டு துறைகண்டு பூஜை செய்ய
வழங்குவேன் வெண்மறியி னாசனத்தில்
பழிவரா தென்மேற்கு பீடங் கொண்டு
பக்குவமாய் விடதாரி புட்பஞ் சாத்தி
தொழுகுவாய் சிவப்புமணி பூஜைக் காகும்
தொல்லையறும் மகாநைவேத் தியந்தா னாகும்
வழுத்துவேன் வித்துவேஷ ணந்தா னையா
வகைவகையாய்பிரித் துரைப்பே னுனக்குத்தானே (38)

## ஆக்ருஷ்ண மூலமந்திரம்

ஓம் ஹ்ரீயும் ஐயும் சவ்வும் ஸ்ரீயும் கிலியும் ஆக்ருஷ்ணாய சுவாஹா. (உருவு 1008) பூஜை: பால், பழம், தேங்காய், சர்க்கரை வடை, சுண்டல், ததியோதனம், அவல், கடலை, சத்தி முத்தி முதலியவைகளாம்.

# ஆக்ருஷ்ண யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வ-லம்<br>எ-ஹ்ரீயும்<br>5 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>9 | சி-நம்<br>உ-சவ்வும்<br>4 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>12 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>11 |
| சி-நம்<br>உ-சவ்வும்<br>12 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>11 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>15 | வ-லம்<br>எ-ஹ்ரீயும்<br>9 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>4 |
| ம-நம்<br>இ-கிலியும்<br>9 | வ-லம்<br>எ-ஹ்ரீயும்<br>4 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>12 | சி-நம்<br>உ-சவ்வும்<br>11 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>15 |
| ந-ஐம்<br>அ-ஐயும்<br>11 | சி-நம்<br>உ-சவ்வும்<br>15 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>19 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>4 | வ-லம்<br>எ-ஹ்ரீயும்<br>12 |
| ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>4 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>12 | வ-லம்<br>எ-ஹ்ரீயும்<br>11 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>15 | சி-நம்<br>உ-சவ்வும்<br>9 |

மேற்கூறிய இயந்திரத்தை துளசி பலகையில் வரைந்து அபிஷேக முதலியதுஞ் செய்து விடதாரி புட்பஞ்சாற்றி தென்மேற்கில் வெள்ளாட்டுத்தோ ளாசனங்கொண்டு சிவந்த மணியால் உருவேற்ற ஆக்ருஷ்ணம் சித்தியாகும்.

அன்றி இருபத்தைந்தறையுள்ள இயந்திரத்தில் நாற்கோணம், வட்டம், அறுகோணம், முக்கோணம், ஐங்கோணமாகப் போட்டு மூன்றுவதணையை அறைகடோறும் பிடித்து மாறியபின் பீஜங்களை அடைக்கவும்.



## வித்துவேஷணச் சித்து

பிரித்தேனே வித்துவேஷ ணாந்தா னையா
பிசகாது யிருபத்தைந் தறைதான் கீறி
வருத்தமின்றி யறுகோணம் முக்கோ ணந்தான்
வகையான வைங்கோணம் நாற்கோ ணம்பாற்
பொருத்தமாய் வட்டமது போடு போடு
பொங்கமுடன் சிவயநம வென்று மாட்டு
கருத்துவைத்து நம்-சவ்வும் நம்-லம் போடு
கலங்காதே ஐம்என்ற பீஜம் போடே. (39)

போட்டுவிடு உ-ஓ-இ எ-அ போடு
புகழான சவ்வும்ஸ்ரீயும் கிலியும் ஹ்ரீயும்
நீட்டமாய் ஐயும்என்ற பீஜம் போடு
நீமகனே மூன்றுவ தணையை மாறு
தாட்டிகமாய் நாலுபனி ரெண்டு போடு
தாழ்வின்றி பதினொன்று பதினைந் தப்பா
நாட்டுவாய்க் கடைவீட்டில் ஒன்ப தையா
நாலாவ தணைபிடித்து மாறுமாறே. (40)

## பூஜாவிதி

மாறிவிடு பூஜைவிதி சொல்லக் கேளு
மகிழ்வாகப் பச்சைமரம் பலகை பீடம்
கோறிவிடு ஆசனமாந் தென்கிழக்கு
குழந்தாய்கேள் வெள்ளெருக்கன் பூவை சாத்து
தேருவாய் பச்சைமணி ஜெபமே யாகும்
தெளிவாக மனவுறுதி கொண்டு நீயும்
கூறினேன் பூசிக்க வித்து வேஷணம்
குணமாகுங் குற்றமில்லை குறித்துப் பாரே. (41)

## வித்துவேஷண மூலமந்திரம்

ஓம்-சௌவும், ஸ்ரீயும், கிலியும், ஹ்ரீயும், ஐயும், வித்துவேஷணாய சுவாஹா. (உருவு-1008) பூஜை; பால், பழம், சர்க்கரை, அவல், கடலை, சுண்டல், வடை, பாயாசம், பொங்கல், நிம்பழம், சத்திமுத்தி முதலியவைகளாம்.

(பின்பக்கம் பார்க்க.)

# வித்துவேஷண யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி-கம் உ-சவ்வும் 4 | ய-சௌம் ஓஸ்ரீயும் 12 | ம-ஈம் இ-கிலியும் 11 | வ-லம் எ-றீயும் 15 | ந-ஐம் அ-ஐயும் 9 |
| ம-ஈம் இ-கிலியும் 1[illegible] | வ-லம் எ-றீயும் 9 | ந-ஐயும் அ-ஐயும் 4 | சி-கம் உ-சவ்வும் 12 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 11 |
| ந-ஐம் அ-ஐயும் 12 | சி-கம் உ-சவ்வும் 11 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 15 | ம-ஈம் இ-கிலியும் 9 | வ-லம் எ-றீயும் 4 |
| ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 9 | ம-ஈம் இ-கிலியும் 4 | வ-லம் எ-றீயும் 12 | ந-ஐம் அ-ஐயும் 11 | சி-கம் உ-சவ்வும் 15 |
| வ-லம் எ-றீயும் 11 | ந-ஐம் அ-ஐயும் 15 | சி-கம் உ-சவ்வும் 9 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 4 | ம-ஈம் இ-கிலியும் 12 |

மேற்கூறிய இயந்திரத்தை மாம்பலகையில் வரைந்து, அபிஷேக முதலியதுஞ் செய்து வெள்ளெருக்கன் புட்பத்தைச் சூடி தென்கிழக்கில் பச்சை மாம்பலகையா லாசனங்கொண்டு பச்சை மணியால் உருவேற்ற வித்துவேஷணச்சித்து சித்தியாம்.

அன்றி இருபத்தைந்தறையுள்ள இயந்திரத்தில் அறுகோணம், முக்கோணம், ஐங்கோணம் நாற்கோணம், வட்டம் இவைகளை முன்வரைந்து பின் பீஜங்களை அடைக்கவும்.

## பேதனச் சித்து

குணமாகும் பேதமாஞ் சித்து கேளு
கொற்றவனே யிருபத்தைந் தறைதான் கீறி
மணமுள்ளோய் ஐங்கோணம் நாற்கோண வட்டம்
மயங்காதே யறுகோணம் முக்கோ ணம்பார்



கணக்காக ம-வ-ந-சி-ய வென்று மாட்டு
கலங்காதே ஈம் லம்-ஐம்-கம்-சௌ வும்தான்
பிணக்கற்ற இ-எ-அ-உ-ஓ போடு
பிசகாமல் கிலியும்றீயும் ஐயும் தானே. (42)

தானேதான் சவ்வும் ஸ்ரீயும் பீஜம் போடு
தன்மையாய் மூன்றுவ தணையை மாறு
கோனேகேள் பதினொன்று பதினைந் தையா
கொற்றவனே ஒன்பதும் நாலு போடு
தேனேபார் கடைவீட்டில் பனிரெண் டாகும்
தெளிவாக தான்வரைந்து செப்பக் கேண்மோ
மானேநீ நாலாவ தணை பிடித்து
மாறிவிடு பேதன யந்திர னைச்சே. (43)

இயந்திரத்தின் பூஜைவிதி யறையைக் கேளு
பண்புள்ளோய் ஆனைநிறம் பலகைபீடம்
சுந்தரனே யாசனமாம் வடக்கு சொன்னேன்
தொழுதேற்ற வல்லாரைப் புஷ்ப மாகும்
இந்திரனே துளசிமணி பூஜைக் காகும்
என்னசொல்வேன் பேதனத்தின் சூக்கு மத்தை
மந்திரமே யுனக்கடக்கம் மறைவோ யில்லை
மாபெருமை யிவ்வித்தை மகிழ்ந்து பாரே. (44)

## பூஜாவிதி

## பேதன மூலமந்திரம்

ஓம் கிலியும் றீயும் ஐயும் சவ்வும் ஸ்ரீயும் பேதனயா சுவாஹா (உருவு 1008) பூஜை: பால், பழம், சர்க்கரை, அவல், கடலை, சுண்டல், வடை முதலியவைகளாம்.

(பின்பக்கம் பார்க்க)

# பேதன யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ம-ஈம்<br>இ-கிலியும்<br>11 | வ-லம்<br>எ-றீயும்<br>15 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>9 | சி-நம்<br>உ-சவ்வும்<br>4 | உ-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>12 |
| ந-ஐம்<br>அ-ஐயும்<br>4 | சி-நம்<br>உ-சவ்வும்<br>12 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>11 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>15 | வ-லம்<br>எ-றீயும்<br>9 |
| ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>15 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>9 | வ-லம்<br>எ-றீயும்<br>4 | ந-ஐயும்<br>அ-ஐயும்<br>12 | சி-நம்<br>உ-சவ்வும்<br>11 |
| வ-லம்<br>எ-றீயும்<br>12 | ந-ஐம்<br>அ-ஐயும்<br>11 | சி-நம்<br>உ-சவ்வும்<br>15 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>9 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>4 |
| சி-நம்<br>உ-சவ்வும்<br>9 | ய-சௌம்<br>ஓ-ஸ்ரீயும்<br>4 | ம-ஈம்<br>இ-கிலியும்<br>12 | வ-லம்<br>எ-றீயும்<br>11 | ந-ஐயும்<br>அ-ஐயும்<br>15 |

மேற்கூறிய இயந்திரத்தை வெண்தேக்குப் பலகையில் வரைந்து, அபிஷேக முதலியதுஞ் செய்து வல்லாரைப் புட்பஞ் சாற்றி வடதிசையில் கருப்புப் பலகை ஆசனங்கொண்டு துளசி மணியால் உருவேற்ற சித்தியாம்.

அன்றி இருபத்தைந் தறையுள்ள இயந்திரத்தில் ஐங்கோணம், நாற்கோணம், வட்டம், அறுகோணம், முக்கோணமாகப் போட்டு, பின் பீஜங்களை அடைக்கவும்.

## மாரணச் சித்து

பாரேநீ மாரணத்தின் போக்குச் சொல்வேன்
பாலகனே பகராதே பாரிலே தான்
சீரேநீ யிருந்திடுவாய்க் கொடுமை மெத்த
செப்பாகங் கைபாகங் கண்டுமே தான்



கார்மேகம் போலேநீ யாடிப் பாரு
கழறாதே கர்மிகட்கு யிந்த மார்க்கம்
பேர்பெற்ற என்சீஷா வெகு சுருக்கு
பேணிப்பா ரிருபத்தைந் தறைதான் போடே. (45)

போட்டுநீ ஐங்கோண அறுகோணந் தான்
புகழான நாற்கோண முக்கோணந் தான்
நீட்டமாய் வட்டமது போடு போடு
நினைவாக மசிவயந வென்று மாட்டு
கோட்டுகளில் ஈம்-நம்-லம் சௌவும் போடு
கொழுநனே ஐம்என்ற பீஜம் போடு
தாட்டிகமாய் கிலியும் சவ்வும் ஸ்ரீயும்
தண்மையுடன் ஐயும்என்ற பீஜம் போடே. (46)

பீஜமது போட்டவுடன் சொல்லக் கேளு
பெருமையாம் மூன்றுவ தணை பிடித்து
வாசகமாய் மாறிவிடு முன்போ லையா
வரிசையாய் பதினொன்று நாலுபதி னைந்துதானே
நேசமாய் பனிரெண்டு ஒன்ப தையா
நீகுழந்தாய் நாலாவ தணை பிடித்து
கூசமின்றி மாறிவிடு அறைக டோறும்
குற்றமில்லை மாரணந்தான் சித்தி யாச்சே. (47)

## பூஜாவிதி

சித்தியாந் தெற்குமுன் மாச னங்கேள்
சிறப்பற்ற எட்டியது பலகை யாகும்
இத்தரையில் காக்கணம்பூ சாற்ற லாகும்
என்னசொல்வேன் எட்டிமணி பூஜைக் காகும்
புத்தியுள்ளோய் புதுமையடா இந்த மார்க்கம்
புகன்றேனே புண்ணியனே யாடிப் பாரு
கர்த்தனே நீயாகுங் கழறொண் ணாது
கைகண்ட வித்தையடா கருதிப் பாரே. (48)

## மாரண மூலமந்திரம்

ஓம்-கிலியும்-சவ்வும்-றீயும்-ஸ்ரீயும்-ஐயும்-மாரணயா-சுவாஹா
உருவு 1008) பூஜை: பால், பழம் முதலியவைகளாம்.

# மாரண யந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ம-ஈம் இ-கிலியும் 11 | சி-நம் உ-சவ்வும் 4 | வ-லம் எ-றீயும் 15 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 12 | ந-ஐம் அ-ஐயும் 9 |
| வ-லம் எ-றீயும் 12 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 9 | ந-ஐம் அ-ஐயும் 11 | ம-ஈம் இ-கிலியும் 4 | சி-நம் உ-சவ்வும் 15 |
| ந-ஐம் அ-ஐயும் 4 | ம-ஈம் இ-கிலியும் 15 | சி-நம் உ-சவ்வும் 12 | வ-லம் எ-றீயும் 9 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 11 |
| சி-நம் உ-சவ்வும் 9 | வ-லம் எ-றீயும் 11 | ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 4 | ந-ஐம் அ-ஐயும் 15 | ம-ஈம் இ-கிலியும் 12 |
| ய-சௌம் ஓ-ஸ்ரீயும் 15 | ந-ஐம் அ-ஐயும் 12 | ம-ஈம் இ-கிலியும் 9 | சி-நம் உ-சவ்வும் 11 | வ-லம் எ-றீயும் 14 |

மேற்கூறிய யந்திரத்தை வெள்ளீயத்தகட்டில் வரைந்து அபிஷேக முதலியதுஞ் செய்து காக்கணம்பூச் சாற்றி தென்றிசையில் எட்டிப் பலகையில் ஆசனங்கொண்டு எட்டிமணியால் உருவேற்ற சித்தியாம்.

அன்றி இருபத்தைந் தறையுள்ள இயந்திரத்தில் ஐங்கோணம், அறுகோணம், நாற்கோணம், முக்கோணம், வட்டம இவைகளை வரிசைக் கிரமமாய்ப்போட்டு மூன்றுவதணையை அறைகடோறும் பிடித்து மாறியபின் பீஜங்களை அடைக்கவும்.

இந்நூலிற் கூறிய அட்டமாசித்துகளின் சக்கரங்களுக்கு சுற்றிலும் அறைகடோறும் சூலங்களைப் போடவும்.

கருதிப்பா ரியான்சொன்ன மார்க்கம் போலக்
கழறுவா ரிவ்வுலகி லொருவ ருண்டோ
பொருமையாய் சித்தரெலா மறைத்துச் சொன்னார்
புகன்றேனே பரிபாஷை யான் திறந்து



அருமையடா இப்போக்கு அவனி யெங்கும்
அகப்படா தென்றுசொன்னேன் பெருமை மெத்த
தருமவான் சொன்னதெல்லாந் தவறி டாமல்
சாதிப்பா யென்னசொல்வேன் பெருமை தானே. (49)

சொல்லிவிட்டே னட்டமா சித்தி யெல்லாம்
சுந்தரனே யிந்திரனே சொர்ண பாலா
வெல்லுவா யொருவருமே யுனக்கீ டுண்டோ
வெகுசுருக்கு வெகுசுருக்கு சொன்னேன் சொன்னேன்
கல்விவாய் சொன்னமொழி தவறா தையா
கழறுதே கருமிகட்கு சொர்ண பாலா
நல்லவனே பொய்வேட தாரி யோர்கள்
நயந்துமே யுனைகேட்பார் நவிலொண் ணாதே (50)

ஒண்ணாது யிதிலுள்ள மர்ம மெல்லாம்
உத்தமனுக் கோதிடுவா யுண்மை யாக
கண்ணான கண்மணியே கருத்து வைத்து
காரணமாய்ச் சற்குருவைக் கருதிப் பாரு
நண்ணுக வவரைப்பா ரிந்த நூலில்
நவின்றதொரு மர்மமெல்லாம் நண்ப னென்று
வண்மையா யவர்பாதந் தொழுது போற்றி
வணங்குவாய்ப் பொருளுரைப்பார் வகையாய்த்தானே.

## பொய்மாந்திரீகர்

வணங்குவா யுலகினிலே மாந்தி ரீகர்
மகிதலமு மென்வசமே யென்று சொல்வார்
கணங்களெல்லா மெந்தனுக்குச் சித்தி யென்பார்
கண்ணதனில் கண்டேனே தெய்வ மென்பார்
குணமான சக்கரத்தின் மாற லெல்லாம்
கதிகண்டு மாறுவோ மென்று சொல்வார்
இணங்கர்தே கோடிகோடி உருவே செய்தோம்
என்றல்லோ வெடுத்துரைப்பார் மட்டி மானே. (52)

மட்டியாம் மந்திரத்தின் வகையைக் காணார்
மகிதலத்தில் பேயோட்ட முன்பே போவார்
நட்டணையாய்த் தூளிதமும் மந்திரிப் பார்
நலங்கண்டு சொல்பவர் லபிநயிப் பார்

கட்டளாய்த் தூளிதமும் மைகள் சாந்து
கனமான குங்குமமு மணிவா ரப்பா
இட்டமா யலகையது யில்லால் மேலே
எடுத்துரைப்பார் ஜடாமுனியன் வசமென் பாரே. (53)

வாசமென்பா ருடையாள்மே லில்லை யென்பார்
வாய்க்குவந்த வழியல்லோ பழியே சொல்வார்
நீசமாந் தேவதைசள் பிடித்த தென்பார்
நிசம்போல வோட்டுவார் தந்திர மாக
நாசமடை விப்பார்கள் நல்ல பெண்ணை
நயமாகத் தானழைப்பார் லீலைக் கப்பா
பூசைசெய் பவர்போல பெண்கள் தன்னை
புணருவார் கற்பழித்து விடுவார் தானே. (54)

## மெய்மாந்திரீகர்

விடுவார்கள் மந்திரத்தி னுளவை யெல்லாம்
விவரமாய்க் கண்டறிந்தோர் செயலைக் கேளு
தொடுகுறிபோல் செய்வார்கள் தொழில்க ளெல்லாம்
தொட்டவிடம் விட்டவிடஞ் சித்தாய்க் காணும்
கொடுமையிலா மனமுடையோர் கூர்ந்து பாரு
கோடிசித்து ஆடினாலும் வெளி வரார்கள்
வடிவுள்ளோர் வானர்களை யேவல் கொள்வர்
வையகமு மொருநொடியில வசங்கொள் வாரே. (55)

கொள்வாரே பொய்சூது பேச மாட்டார்
கொன்றைமலர் சூடினனைப் போற்றி செய்வார்
தெள்ளுமணி பெரியோரை வணங்கி நிற்பர்
தேவிமனோன் மணியாளை யருச்சிப் பார்கள்
கள்ளமன மில்லாதார் கயவர் முன்பு
கழறார்கள் பொருளதனைக் கற்றோ ரையா
விள்ளுவார் விவேகிகளுக் கன்பா யல்லோ
வெளியதனில் கற்றோனென் றியம்பார் தானே. (56)

இயம்பாரே மாந்திரீகக் கிரியில் நின்று
என்மகனே யோகத்தில் சேரு வார்கள்
சயம்பெற்று யோகத்தைக் கடந்தப் பாலே
சாருவார் ஞானவழி யதனி லல்லோ
நயம்படவே கலந்துகொண்டு ஞானவா னாய்
நாயகனே பிறப்பிறப்பு மற்றோ ராவர்
லயமாகு மவர்மனது சிவமாய் நிற்கும்
லக்கமதா யவர்பெருமை சொல்லொ ணாதே. (57)



ஒண்ணாது சொல்லுகிறே னுத்தமா கேள்
ஓகோ சித்தரெல்லா மொன்றாய்க் கூடி
நண்ணாகச் சொல்லவில்லை நூல்க டோறும்
நவின்றாரே பரிபாஷை யாக வல்லோ
கண்ணேகே ளவையெல்லாந் திறந்து நன்றாய்க்
காட்டினே னுந்தனுக்காய்த் திறவு கோற்போல்
பெண்ணாசை தனைவிடுத்து பேணிப் பாரு
பேருலகி லட்டசித்துங் கைக்கு ளாச்சே. (58)

சித்தான வட்டசித்துங் கோர்வை யாக
சிற்பரத்தி னடிதொழுது சிரங் குனிந்து
பக்தியுடன் சொன்னேனே யுந்தனுக் காய்
பாருலகிற் பகராதே பண்பு ளோனே
எத்திசையு முனைத்தொழுது போற்றும் பாரு
எந்தசித்து செய்தாலும் மார ணந்தான்
புத்திகொண்டு செய்யாதே பாப மாகும்
புண்ணியனே யேழுசித்து மாடு வாயே. (59)

ஏழுசித்து மாரணமாஞ் சித்து கூட
எடுத்துவிளை யாடிடுவாய்க் கைபாகந் தான்
ஆழியொத்த வித்தையடா யருமை மெத்த
ஆடிப்பா ரொவ்வொன்று மதிசயந் தான்
ஊழியனே யென்வாக்குப் பொய்யா தப்பா
உலகினிலே கருவூரார் சொன்ன சொற்றான்
பாழில்லை யெனப்பெரியோர் போற்று வார்கள்
பணித்துகேள் நூலினிட வுளவைத் தானே. (60)

நூலினிட வுளவெல்லா மெடுத்துச் சொல்வார்
நொடிக்குள்ளே யென்னூலை யெடுத்துக் காண்பி
பாலினுட் சுவையொத்த நூல்தா னென்று
பணிந்துமே யிருகண்ணி லொத்திக் கொள்வார்
வாலிபனாங் கருவூரார் சீஷனென்று
வணங்குவா ரென்னைப்போல் பாவிப் பார்கள்
நாலுதிசை யோர்களுக்கென் பேரைச் சொல்ல
நடுங்குவார்க் கருவூரார் பெருமை யென்றே. (61)

பெருமையுள்ள போகருட சீஷ னென்று
பேசுவார் பேருலகு மாண்ப ரெல்லாம்
அருமையுள்ள சித்தவரவ ரென்று சொல்வார்
அப்பப்பா லவர்வாக்கு பொய்யா தென்பார்

வருமைவருங் காலத்தி லென்னைப் போற்று
வகைசொல்லிப் போவேனே வர்ம மில்லை
கருவாளி யாவாயே யென்னைப் போல
கண்மணியே கலங்காதே பதியில் நில்லே. (62)

நில்லடா சந்திரனை மேலே கொண்டு
நினைவாகச் சூரியனை கீழே தாக்கி
நல்லடா அனுதினமும் மண்டலந் தான்
நயமாகப் பழக்கமது செய்வா யப்பா
வெல்லுவாய் வழிரெண்டு மொன்றாய்ப் போச்சு
வேதாந்த மவுனத்தில் சொக்கி நில்லு
தொல்லைபறும் ஞானமென்ற வெளியைக் கண்டு
தோய்ந்தபொரு ளிதுவென்று நில்லு நில்லே. (63)

நில்லடா ஓர்மனதா யிருந்து கொண்டு
நிராமயமாஞ் சொரூபமதி லடைவாய்க் காரு
சொல்லடா சிவத்தினிட பெருமை யென்று
சொக்காதே கன்னியுட மாய்கை தன்னில்
கல்லாத சித்தெல்லாங் கற்றே னென்று
கழுறாதே கருமிகட்கு யிந்தப் போக்கு
மெல்லடா வனுதினமுந் தியான மாக
மேதினியில் சித்தல்லா மாடு வாயே. (64)

ஆடுவா யென்றல்லோ வுந்த னுக்கு
அறைந்தேனே சித்தினிட ரூக்கு மத்தை
காடுமலை திரிந்தாலு மகப் படாது
கருவான சிஷனென்று சொல்லிப் போட்டேன்
நாடுதனி லட்டசித்தும் நேர்த்தி யாக
நாட்டினேன் பத்திரமாய் நூலைக் காரு
தேடுவாய் குருவினுட பதத்தை யப்பா
தெளிவாக வட்டசித்து முற்று முற்றே. (65)

கருவூரார் மாந்திரீக அட்டமாசித்து
முற்றுப்பெற்றது.



கடவுள் துணை

# தேவதா பூஜைகள்

## அஷ்டவிநாயகர் பூஜை

மாலை

ஹரிஓம் திருவுளமே, ஆதி திருவுளமே, செந்தாமரையிற் பிறந்திடு மருவே, உன்முக மென்முகமாக உன்கண் என் கண்கள கண்டோர் கைவசமாக, சத்தியும் பிள்ளையாரும் முன்னடக்க,

### மூலமந்திரம்

மநயவசி-நயவசிம-யவசிமந-வசிமநய-சிமநயவ-ஐயும் கிலியும்-சவ்வும்-ஓம் கணபதி வருக, ஓங்கார கணபதிவருக, சிவசிவா ஓம் றிங்-அங்-ஆதிகணபதி வருக, ஓம் கிலி சிங்வேத மகாகணபதி வருக ஓம் ஸ்ரீ கிலி நடன கணபதி வருக ஓம் கிலியும் சவ்வும் சத்திகணபதிவருக, ஓங்-றீங்-லீ-வாலகணபதி வருக, ஸ்ரீயும்-றீயும் உச்சிஷ்ட கணபதிவருக, ஓம்-றீங்-ம்-மூலகணபதி வருக ஓம்-றீங்-நசி-உக்கிர கணபதி வருக. ஓம்-கிலி அங்-உங்-மூலாதார கணபதி வருக (உருவு லட்சம்.) மாக நைவேத்தியம்.

## வேறு கணபதி பூஜை

மாலை

ஓம்கணபதி, மகாகணபதி, தொந்திக்கணபதி, இன்றஞ்செய திரி, திரி, கணபதி, சத்தி கணபதி, சந்தி கணபதி, சமய கணபதி, ஆசாரகணபதி, என்முன் நிற்க சிவா.

### மூலமந்திரம்

மாலை

ஓம், றீங், ஸ்ரீங், வங், வயநமசி, சுவாஹா, (உருவுலட்சம்.) மகா நைவேத்தியம்.

## வேறு கணபதி பூஜை

மாலை

ஓம் கணபதி, ஆதிகணபதி, அறுதிகணபதி, சத்திகணபதி சங்கார வல்லவா ஸ்தம்பனம் மோகனம் முதலிய அட்டமாசித்தும் என்வசமாக சிவா.

### மூலமந்திரம்

ஓம் வங் யங் நங் மங் சிங் சுவாஹா, (உருவு லட்சம்.) மகா நைவேத்தியம்.

### மாலை

### வேறு கணபதி பூஜை

ஓம் கணபதி, அகாரகணபதி, உகாரகணபதி, சிகாரகணபதி மகாரகணபதி, வகார கணபதி, வாவா கணபதி.

### மூலமந்திரம்

ஓம் அங் உங் சிங் மங் வங் சுவாஹா. (உருவு லட்சம்.) மகாநைவேத்தியம்.

### உச்சிஷ்ட கணபதி பூஜை

ஓம் அஸ்யட்ரீ உச்சிட்ட கணபதி, மஹாமந்திரஸ்ஷியா கனபரிஷியே, தெய்வகாயத்ரீ சந்தஹ கம் யம் பம் றாம். சக்திஹி, சுவாஹா. இதி கீலகம் உச்சிட்ட கணபதி பிரஸாத ஸித்தியார்த்தே, ஜபே விநயோசஹ சத்துரு நாசநார்த்தே, மம இஷ்ட காமியார்த்த, பிரசன்ன சித்தியார்த்தே, சனகரிஷியே, நமஹ சிரசே தெய்வ காயத்ரி சந்தேக நமஃ சண்முகே உச்சிஷ்ட கணபதியே நமஃ அத்திமுகயே நமஃ அஞு அம் தோம் றீம் கிலிம் கம் கெம் மம் காதல் காரபீஷ்டாய நமஃ (உருவு லட்சம்) மகா நைவேத்தியம்.

### மகா பஞ்சாட்சர பூஜை

அரிஓம் ஐயும் கிலியும் சவ்வும் றீயும் ஸ்ரீயும் நமசிவய மசிவயந சிவயநம வயநமசி யநமசிவ(உருவு லட்சம்)மகா நைவேத்திய.

### ஸ்ரீ சிவசுப்பிரமணிய பூஜை

### மாலை

ஓம் சரவணபவனே சங்கரியீன்ற சண்முக றீங் ஓங்கார சமய காருணியாள் புதல்வனே முருகா, தந்தியுஞ் சுருத்திக்கோணம் சரவணபவனென வுரைப்பவரிடர்கள் தவிர்த்திட மகிட்சிகொண் டெழுந்து சதங்கையுங் காலில் கொஞ்சிட மயிலில் தாண்டியே சத்திவேலெடுத்து சரவணபவனென சமயமேவந்து சவ் ரவ் அவ் வென்னெவும் சகல பவ்வவ்வுங் கிலியென ஐயும்சாத்திட பில்லிகளனைத்தும் சரவணபவனென வலைதனை விரித்துத் தரித்திட கால் தெரியாமல் சங் ரங் அங்கென்ன சடுதியில் வருவாய் சண்முகா சரவணபவனே.



### மூலமந்திரம்

சரவணபவ ஓம் ஐயும் கிலியும் சவ்வும் றீயும் ஸ்ரீயும் சரவணபவ வசி வசி சுவாகா (உருவு லட்சம்) மகா நைவேத்தியம்.

அன்றி மேற்கூறிய சிவ சுப்பிரமணியதேவர் மாலையை இனி வரும் மூலமந்திரங்களுக்கு முன் உபயோகித்துக் கொள்ளவும்.

### வேறு சுப்பிரமணியர் பூஜை

ஓம் றீங் ஓம் சரவணபவ பவ்வும் வவ்வும் கிலியும் ஐயும் சங் ரங் அங் சரவணபவ (உருவு லட்சம்) மகா நைவேத்தியம்.

### வேறு சுப்பிரமணியர் பூஜை

அரி ஓம் ஐயும் கிலியும் சவ்வும் ஸ்ரீயும் ஹரீயும் றிங் லீங் வங் ஓங் சிங் மங் யங் நங் சிவசுப்பிரமணியபாலர் அம்பிகா சரவணபவா வருக வருக வசிவசி சுவாகா (உருவு லட்சம்) மகா நைவேத்தியம்.

### வேறு சுப்பிரமணியர் பூஜை

ஓம் சத்தி சத்தி மகாசத்தி ஆதிசத்தி பராசத்தி சிவசத்தி விஷ்ணுசத்தி வேலா ஓம் அர அர நமசிவாயா குருபரா, நமசிவாயா, குருபரா சிவயநம குருபரா, வயநமசி, குருபரா, யநமசிவா, குருபரா, ஆதிகுருபரா, அனாதிகுருபரா, ஆனந்தரூபா ஓம் சரவணபவ ரணபவச, அணபவச, ணபவசர அபவசர அண பசர வணபவ ஓம் ஷாம், ஷண்முக கார்த்திகேயா, கடம்பா, குமரா, கந்தா, காங்கையா, சூரசங்காரா, சுப்பிரமணியா மயூரவாகனா, வா வா அதிசத்தி பராசத்தி ஆணே வா, வா, சகல பாவங்களும் சகல தோஷங்களும் சகல சத்துருக்களும், ஹரி ஹரீ, அர அர ஓங்காரமாய், ஆங்காரமாய், சங் சங் சிங் சிங் சுங் சுங் சவ்வும் அவ்வும் வும்வும் சிவயா ராஜயோகம் தெய்வயோகம் ராஜவசியம், தெய்வ வசியம், சகல சம்பத்தும் சகல பாக்கியமும், சகல ஐசுவரியமும், வா வா சர்வபூத பிரேத பிசாசுகள் அஞ்சி ஒடுங்கி ஆசாரமாக நிற்க சிவா அ இ உ ஏ ஒ ஓ ஓம் குருபரா என்முகம் கண்ட சர்வ ஜீவ ஜெந்துக்களும் உண்முகமென்றெண்ணி என்னடியின் கீழ் வணங்கி நிற்க சிவா, ஓம் ஸ்ரீயும் கிலியும் லிங் வங் வங் சிவா (உருவு ஆயிரம்) மகா நைவேத்தியம்.

### வேறு சுப்பிரமணியர் பூஜை

ஹரி[illegible]ம் ஐயும் கிலியும் சவ்வும் ஸ்ரீம் றீம் ஹிரிம் கிலீம் சரவணபவ (உருவு லட்சம்) மகா நைவேத்தியம்,

## வாலை பூஜை

ஓம்-ஐயும் - கிலியும்-சவ்வும் - சவ்வும்-கிலியும் -ஐயும்-வா-வா வாலை பரமேஸ்வரி பஞ்சாட்சரி ஆநந்தரூபி நமஹ (உருவு மூன்று லட்சம்.) மகா நைவேத்தியம்.

## நவக்கிரக பூஜை

ஓம் ஆதித்யாயநமஹ, ஓ கிலீம் சோமாயநமஹ, ஓம் ஸ்ரீம் அங்காரகாய நமஹ, ஓ ஐயும், புதாய நமஹ, ஓம் றீம் குருவே நமஹ, ஓம் ஹரீயும் சுக்கிராயநமஹ, ஓம் லம் சனீஸ்வராயநமஹ, ஓம் ஹிரலியம் இராகுவேநமஹ, ஓம் ஹரீம் கேதுவாயநமஹ

## சொர்ண வயிரவர் பூஜை

ஓம் வடுகா வடுகாயா அகோரவடுகாயா குக்கிடவடுகாயா ஊமத்தன் வடுகாயா நமவடுகாயா மவவடுகாயா சிமவடுகாயா உமவடுகாயா றிமவடுகாயா யமவடுகாயா சொர்ணவடுகாயா ஸ்ரீயும் கிலியும் கம் அம் வடிகாயா சுவாஹா (உருவு லட்சம்.) மகா நைவேத்தியம்,

## வேறு சொர்ண வயிரவர் பூஜை

ஓம் சொர்ணாக்ருஷ்ண பயிரவாயா தனதான்ய சம்பூரண சத்தியப் பிரதாபாயா தாரித்திர விமோசனாயா ஓம் ஆம் மவ்வும் சிவயநம (உருவு லட்சம்.) மகா நைவேத்தியம்.)

## வேறு சொர்ண வயிரவர் பூஜை

ஓம் கோடி சூரியப்பிரகாசம் குபேரனிலயன் மகத்து நேத்ரத்ரயம் சதுரப்பாகு பாசாங்குசவரா அபயம் சொர்ணபாண சம்பூரண சோபிதசொர்ண வயிரவம் சித்தவித்தியாதர சேவியம் தியாகேனகவயிரம் ஓம் ஸ்ரீம் றீம் ஸ்ரீம் ஓம் யநமசிவ (உருவு லட்சம்.) மகா நைவேத்தியம.

## வேறு வயிரவர் பூஜை

இரத்தச் சுவால ஜடாதாச்சியுதம் ரத்தாங்கதே ஜோமயம் அஸ்தே சூலகபால பாசடமரகம் பத்தரத்தக்ஷணம் நிருவாணம் சுவானவானம் ஸ்ரீநயனம் ஆநந்த கோலாகலம் வந்தே பூதப்பிரேத பைசாசவடுகம், பயிரவம் சேத்திபராக்ஷிபபாலனம் சிவம் ஓம் நங் மங் சிங் வங் யங் பயிரவா வா வா (உருவு லட்சம்.) மகா நைவேத்தியம்.



## வேறு வயிரவர் பூஜை

அரி ஓம் பயிரவா அக்கினி பயிரவா அங் உங் இங் வா வா (உருவு லட்சம்.) மகா நைவேத்தியம்:

## ஆஞ்சநேயர் பூஜை

பிஸ்மில்லாஹி ரஹீமான் ரஹீபங் அதர் தல்லிகேபங் சைதாணுகு பூகுதவங் ஜாதுமகர்குபங் அனுமங்தே சொட்டிசேபங் நீலா கோடா பிலாஜோடா சல்-சல்-பே அநுமான் தேரேசத்தி குருவு ராம் பத்திராம் சௌகோட்டி சௌவுமுகாபங்தாயா, துன்மன்கே பீட்மர்பங்கு (உருவுலட்சம்.) மகா நைவேத்தியம்.

## வேறு ஆஞ்சநேயர் பூஜை

ஓம் ராம் அநுமந்தா ஓங்கார அநுமந்தா ஆங்கார அநுமந்தா ஊங்கார அநுமந்தா அஞ்சனாதேவி புத்திரா அரிராமா தூதா அகோர வீரா அங்-இங்-ராம் அநுமந்தா வருக வருக வசி-வசி சுவாஹா (உருவு லட்சம்,) மகா நைவேத்தியம்.

## நரசிம்ம சுவாமி பூஜை

ஓம் நமோ நரசிம்மாயா அக்கினிச்சுவால நரசிம்மாயா உக்கிர நரசிம்மாயா இரணியசங்கரா பிரகலாதரக்ஷகா சத்துரு சங்கரா இராவண சம்மாரா லட்சுமிமணாளா க. லிங்கமர்த்தன கம்ஸஸம் மாரா பாண்டவசகாயா ருக்மணி சமேதா சீதாமனோகரா அரிவாசு தேவா ஏகபத்தினி விரதா ஸ்ரீராமவைகுந்த வாசா கிருஷ்ணா வாமனாவதாரா கூர்மாவதாரா மச்சாவதாரா வராகவதாரா ஸ்ரீமந்நாராயணா ஓம் அராம் ஹரீம் வா வா (உருவு லட்சத்தி எட்டு) மகா நைவேத்தியம்.

## மாடன சுவாமி பூஜை

அரி ஓம் அகோரமாட கெம்பீரா அகோரதற்கவாழ்முனீஸ்வரா ஸ்ரீபகவதி புத்திரா வீராதி வீரா சுடலைமாடா கிருபையருள் சுவாமி றீங் சௌவும் கிலியும் மம் ஐயும் கிலியும் றீங் வா வா (உருவு லட்சம்) பூஜை சத்தி முத்தி முதலியவைகளாம்.

## வேறு மாடன் பூஜை

ஓம் அநுமந்தாராயா ஆக்ருஷ்ணாரங்கா மலைக்குட்டி தாரா உச்சாடனதியா மாடமந்திரா மசானருத்திரா ஐயும் கிலியும் சௌவும் வா வா (உருவு லட்சம்.) பூஜை சத்தி முத்தி முதலியவைகளாம்.

## தூமாவராகியம்மை பூஜை

ஓம் அரி அரி சக்கரம் அரனெளி சக்கரம் திருதிரு சக்கரம் திரிபுரை நரைசெய்த சக்கரம் ஓம் பத்திரகாளி ஓம் சத்துரு சம் மாரி உன் கையில் கபாலமும் கண்ட கோடாலியும் அகோரகோர உக்ர உக்ர புகைபுகை ஜலஜல கும்பய கும்பய அண அண தகதக பாஷய பாஷய அம் இம் குரோம் லலிலலிலாங் லிலிலிலிலீங் லுலு லுலுலூங் மமவசங்க சிவ சிவாயநம் குருகுரு வாவா ஓம் கிலியும் பகவதி ஓம் பஷாங்குக்ஷரி சூலி வாவா நகநக தகதக எகுட எகுட கும்பக கும்பக சுவாலம் சுசீசுவாலாம் ப்ருதிஜ்ஜ¬வாலாயம் அக்கினிச் சுவாலாம் நரதிரகோமாங்கிஷ பக்ஷபக்ஷணி பாஜபந்து அகோரகோர டாட்டேடாட்டே மாமரமாகி, ராம் ரீம் ரூம் ஆக்ருஷாயா ஆக்ருஷாயா கிலீம் சவ்வும் ஐயும் தூமவராகி யம்மா வாவா வசிவசி சுவாகா (உருவுலட்சத்தி எட்டு) பூசை சத்தி முத்தி முதலியவைகளாம்.

## அட்டதிக்கு பந்து

பூரணதுவாரா பந்தாபந்து அக்கினிதுவாரா பந்தாபந்து எமத்துவாரா பந்தாபந்து திரணத்துவாரா பந்தாபந்து வருணத்துவாரா பந்தாபந்து வாய்வுத்துவாரா பந்தாபந்து பாதாளத்துவாரா பந்தா பந்து ஐரருக்ருளா பந்தாபந்து பேர்மருடா சூர்ப் பந்தா ஓம் அரும் ஹ¬ரும் நமசிவய.

## வேறு அட்டதிக்கு பந்து

சிங் கங்காளி ஹஸதிராயா உம்படு சுதினயி புனவாசுமா ஹஸ்திராயா உம்படு.

மேற்கூறிய அட்டதிக்கு பந்தன மந்திரத்தை எட்டு விசை தியானித்து விபூதியை அள்ளி எட்டுதிக்கிலும் போட்டு பூஜையிலுட்காரவும்.

## உடல் கட்டு

ஓம் உள்ளங்கால்ரெண்டும் பூமாதேவிகாவல் கணுக்கால்ரெண்டுங் கணபதிகாவல் முழங்கால்ரெண்டும் முக்கோணர்காவல் துடைரெண்டும் துற்கைகாவல் அரை ஆதிசிவன்காவல் வயறு வயிரவன்காவல் மார்பு மார்க்கண்டன் காவல் கழுத்து கந்தர் காவல் உதடு உத்தமாதேவி காவல் பல்லு பரசுராமன் காவல் நாவு நாராயணன் காவல் கண்ணு ரெண்டுக்கும் கபளிங்கராயன் காவல் கெத்திக்கு நீலவர்ணன் காவல் தலைக்கு தம்பிரான் காவல் உடம்பு சுற்றிலுஞ் சங்குசக்கரம் காவல் என்னைக் கார்க்காவிட்டால் என் கட்டல்ல இது ஈஸ்வரன்கட்டு என்னைக் கார்க்க நமசிவாயா,



## வேறு உடல் கட்டு

ஓம் என்மேனி ஈஸ்வரனுர் காவல் இருபுஜங்களும் பரமேஸ்வரி காவல் உன்னிதமான உடலும் முப்பத்திரண்டு உருவமும் ஓம் என்ற அட்சரம் காவல் சென்னியில் வீரபத்திரன் காவல் சிறப்புடனிருந்து சிறக்கவே மகிழ்ந்து பொன்னிறமாக நிற்க சுவாஹமான வயிரவன் சுற்றிலும் காவல் சுவாஹா.

## வேறு உடல் கட்டு

எவா எவா லங் மங் ஸ்தம்பய ஸ்தம்பய சிவாயநமஹ அங் உங் சிங் கிலீயஹ¬ம் அவ்வும் சகல சாயம் நசி-மசி வங்-சிங்-உம்படு,

மேற்கூறிய உடற்கட்டு மந்திரங்களிலேதேனு மொன்றை மூன்று விசை சொல்லிவிட்டு பின் பூஜைக்கு உட்காரவும்.

## விபூதி மந்திரிக்கத் தியானம்

ஓம் அகோர கோரகுரும்கிரும் ஸ்ரீயும் அவ்வும் சடாக்ஷரரூபி கிம்பிளி ருத்திராங்கிஷ அங் அங் அகோரப்பட்சி சங் சங் சாளுபட்சி அண்டரண்ட மேரண்டபட்சி காலாகாலனையும் பூதா பூதனையும் நமனையும் பெரும்படையையும் பெந்திய பெந்திய வஸதம்பிய வஸதம்பிய மாறிய மாறிய கரிதிய கரிதிய சீக்கிர சீக்கிர உட்சாடே உச்சாடுசண்ணெரி நோக்காடு சர்வ தோஷங்களும் சர்வ பூதப்பிரேத பைசாசங்களும் நசி-நசி-நசி-நசி அண-அண தேறுக-தேறுக-சர்வ சத்துரு சங்காரணையா சாளுபட்சி ராஜாயா அவ்வும் படு சுவாஹா.

## வேறு விபூதி மந்திரிக்கத் தியானம்

ஓம் மந்தாங்கினி இரத்தமேனி நீலரத்தின சடாதரி உக்கிர வக்கிர தானதி சங்குபத்திரி சங்கரதாணி கோரரூபி சகல தோஷங்களையும் பூதப்பிரேத பைசாசங்களையும் மாறே மாறே ஐயும் கிலியும் சவ்வும் கிலியும் ரூரூவராகி நாருத்ரி மதுமாங்கிஸ பக்ஷணி வாலி சூலி மாதங்கி ஆசுவாஹா.

மேற்கூறிய விபூதி மந்திரத்தி லேதேனுமொன்றை நூற்றியெட்டுவிசை தியானித்து குழந்தைகள் மீதில்தூவி நெற்றியிலிட சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.

## தேள் மந்திரம்

அடாகடா மோவிகா பாடாபலா சுகாபான் தேரிகை நைதர்யு தத்தே சூருபணை சவுதா என்று சூரிய கிரணத்தில் குளத்திலிறங்கி ஆயிரத்தெட்டு ஜெபஞ்செய்து பிறகு இயாவருக்காகிலும்

மூன்று துடப்பத்தால் நூற்றெட்டுவிசை மந்திரிக்க தேள் கொட்டிய விஷயம் நீங்கும்.

## சுளுக்கு மந்திரம்

சங்கு உருள சக்கரம் உருள அங்கு அருள ஆகாஷம் உருள சுடுகாட்டு உலும்பு உருள சுளுக்கு உருள ஓம்காளி ஓம்பிடாரி ஓம் நமசிவாயா கிராமதேவா பாதத்தாணைவிடு விடுவிடு சுவாகா ஆ என்று தேள் மந்திரத்தைப்போல செய்யவும்.

## மந்திரங்களுக்கு சாப நிவர்த்தி

ஓம்-அங்-உங்-சிங்-கிலீம்-ஹிறீம்-அவ்வும்சகலமந்திரங்களின் சாகள் நசிமசி-சுவாஹா என்று இலட்சம் உருவு ஜெபித்துப் பின் இயாதாமொரு மந்திரங்களை யெடுத்து ஜெபிக்க ஓரிடையூறின்றி நிறைவேறு மென்று ஆன்றோர்கள் கூறினரென்றறிக.

## அகஸ்திய மகாமுனிவர் கூறிய பஞ்சாக்ஷர பெருமை

குருநாதன் கமலபதஞ் சென்னி வைத்து
கூறுவேன் பஞ்சாக்கரப் பெருமை தன்னை
வருமைபோம் வயநமசி வசிய மையா
வவயான சிவயநம மோகனந் தான்
அருமையுள்ள புலத்தியனே தம்பனந் தான்
ஆச்சரியம் நமசிவ கண்டு கொள்ளு
பெருமையாம் நமசிவ உச்சாடி னந்தான்
பேசுவேன் ஆக்ருஷ்ணப் பெருமை கேளே (1)
கேளேநீ வசியநம கண்டு கொள்ளு
கெணிதமாம் சியமவந வித்து வேஸம்
நாளேபோக் காதுசொல்வேன் பேதனந் தான்
நண்பனே மவநசிய மாரங் கேள்
கோளேயாள் கூறேனே மசிவ வையா
சோமனே மாரணந்தான் காமி கட்கு
காளேநீ சொல்லாதே கருத்தாய்ப் பாரு
கையாகக் கருவூரார் நூலிற் றுனே: (2)

## மேற்கூறிய செய்யுளின் விபரம்

வசியம்-வயநமசிவ மோகனம்-சிவயநம ஸ்தம்பனம்-நமசிவய உச்சாடனம-யநமசிவ வித்துவேஷணம்-சியமவந-பேதனம் மவநசிய-மார்ணம் மசிவயண என்றறியவும்.

## அகஸ்திய மகாமுனிவர் கூறிய ஐம்பத்தோரக்ஷரப் பெருமை

பத்துப் பெரும்புலி ஆன பதினாறு
தத்துவர் மூவர் சமயநீ ரறுவர்



அத்துட னல்வர் அறுவர் மகத்துவம்
இத்தை ரியந்தவ ரென்குரு வாமே.
10-16-3-12-6. என்றறியும்-4.

சகலஜன வசீகரமாஞ் சகாரத் தாலே
தனமுதலா யழைத்துவரும் ரகாரத் தாலே
பகைபிணிநோய் தீர்த்துவைக்கு மகாரத் தாலே
பகைத்தவரைக் கொல்லவைக்கும் ணகாரத் தாலே
சகலமெல்லாம் மோகிவைக்கும் பகாரத் தாலே
சலஸ்தம்பஞ் செய்துவைக்கும் வகாரத் தாலே
அகிலமெல்லாஞ் சடாட்சரத்தா லாடு தையா
ஆரறிவா ரூரெழுத்தின் பெருமை தானே. (3)

## மேற்கூறிய செய்யுளின் விபரம்

வசியம் சர அணபவ ஆக்ருஷ்ண றஹணபவச உச்சாடனம் அணபவசர மாரணம் ணபவசர அ மோகனம் பவசர அண தம்பணம் வசர அணப என்றறியவும்.

## பஞ்சபூதங்களின் விபரம்

நகாரம்-பிரமா, மகாரம்-மஹாவிஷ்ணு, சிகாரம்-உருத்திரமூர்த்தி, வகாரம்-மயேஸ்வரர், யகாரம்-சதாசிவம், நகாரம்-பிரிதிவு மகாரம்-அப்பு, சிகாரம்-வாய்வு, வகாரம்-தேய்வு, யகாரம். ஆகாயம் ஓம் மூலாதாரம்-நகாரம், சுவாதிட்டானம்-மகாரம், அநாகதம்-சிகாரம், மணிபூரகம்-வகாரம், விசத்தி-யகாரம், ஆஞ்ஞை-அதே சரவணபவவெனவும்ஆன்றோர்கள்கூறியிருக்கின்றாரென்றறியவும்.

இந்நூலிற் கூறிய பஞ்சாக்ஷரப்பெருமைகளை அண்டபிண்ட சராசரங்களைத் தாங்கும் ஆயிரநாப்படைத்த ஆதிசேடனாலும் விள்ளுதற் கரிதென்று மேலோர்கள் கூறியமையால் ஒரு நாப் படைத்த என்போலியால் சொல்லுதற்கரிதென் றறியவும்.

### வணக்கம்

சுந்தரக் கருவூரார்தான் சொன்னதோ ரட்டசித்தும்
மந்திரப் பூஜையோடு மணிகளுஞ் சித்துமார்க்கம்
தந்திர வுரைகள்செய்து சாற்றினே னியாவருக்கும்
அந்தர சித்தர்பாவம் அவனியில் போற்றித்தானே.

# தேவதா பூஜைகள்

முற்றுப் பெற்றது.

தெய்வமகள் விலாசம், பிரஸ்.
24, தாண்டவராய பிள்ளை தெரு, சௌகார் பேட்டை, P. O. சென்னை-1.

## தெய்வமகள் பதிப்பு

# திருக்குறள் மூலமும்

[பரிமேலழகர் உரையும், அவ்வுரையைக்கொண்டு இயற்றிய பதவுரை கருத்துரை விசேடவுரையுடன் திரிசிரபுரம் செயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ் தமிழாசிரியர் வித்வான் (Orient) **R. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை** அவர்கள் எழுதிய இலக்கண குறிப்பும் சேர்த்து நாயனர் திருவுருவப் படத்துடன் கிளேஸ் கடிதத்தில் 1068-பக்கங்களுடன் அச்சிட்டு பயிண்டு செய்தது.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் அருளிச்செய்த திருக்குறளாகிய இந்நூல், எக்காலத்தும் எம்மதத்தினருக்கும் சம்மதமாகிய பொது நூலென ஒப்ப முடிந்த முடிவுடையதாகும். இது உலகியலில் ஈடுபடும் ஒவ்வொருவரும் அடையற்பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அடைதற்குரிய கருவி நூலாகும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆக பால் 3-க்கும் அதிகாரம் 188-ஆக 1880-குறள் வெண்பாக்களையுடையது. எம்மொழியிலுஞ் சிறந்த உயர்தனிச் செம்மொழியாகிய இத்தமிழ் மொழியின் மேன்மையையும், சொற்சுவையும், பொருட்பொலிவும் போற்றற்குரியன.

தமிழ் நூல்களில் பண்டைப் பழமைவாய்ந்த இலக்கிய நூலாகக் கருதப்படுகின்ற இத்தகைய நூலைக் கற்பதனல் நமது பழந்தமிழ் மக்களாகிய முன்னேர்களின் கல்வி, அறிவு, ஒழுக்கம், நாகரீகம், வேளாண்மை, கைத்தொழில், அரசியலுணர்ச்சி ஆகிய இவற்றிற்கு ஏற்ற அகன்ற பெரிய அறிவும், கற்பை யணிகலமாகப்பூண்ட பொற்புடை மகளிரின் மேம்பாடும், மற்றும் இவை போன்ற பிறவும், இத்தகையனவென்று உணர்தற்கு இடமாயுள்ளதாலும், செவ்விய உலகியலறிவைப் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் இதனைக் கற்கவேண்டிய தவசியமானதாலும், தமிழ் மக்களுக்கே உரிய தமிழ்மறையாகத் திகழ்வதாலும், இந்நூலுக்கு உரைகண்டார் பதின்மரினும் **பரிமேலழகியார்** உரையே மிகச் சிறந்ததெனப் பாராட்டப்படுவதாலும், அவ்வுரைக்கு உரை தெரிந்தாலன்றிப் பொருளறிவது இயலாதானமையாலும் இந்நூலின் கடின சந்திகளையெல்லாம் பிரித்து விளக்கி, மேற்கோள்களுடன் **விரிவுரையென்னும் புத்துரை**யொன்று சேர்த்து உலகிற்கு பயன்படுமாறு வெளியிடலானேம்.

| | | | | |
|---|---|---|---|---|
| குறள் உரை ரப்பு காகிதம் | விலை ரூபா | 10 | 0 | 0 |
| ஷை கிளேஸ் காகிதம் | விலை ரூபா | 12 | 0 | 0 |

**மஹா பக்தவிஜயம் ராயல் 1-8 சைஸ் பெரிய எழுத்து**

| | |
|---|---|
| படங்களுடன் முதல்பாகம் | 6-0-0 |
| ஷை இரண்டாம்பாகம் 20-தாசர்களடங்கியது | 6-0-0 |

**சரஸ்வதி புத்தகசாலை,**
175, செட்டியார் தெரு, கொழும்பு.



| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| வைத்திய அரிச்சுவடி 4-பாகங்கள் | 1 | 0 | 0 |
| மாட்டுவாகடம் தனி பயிண்டு | 2 | 0 | 0 |
| அசுவசாஸ்திரம் தனி பயிண்டு | 2 | 0 | 0 |
| மாட்டுவாகடம் அசுவசாஸ்திரம் 2-ம் சேர்ந்த கலிகோ கட்டடம் | 5 | 0 | 0 |
| பச்சிலை வர்க்க பசுமூலிகை அகராதி 112 பக்கங்கள் அடங்கியது | 1 | 0 | 0 |
| திருமுருகாற்றுப்படை மூலமும் உரை | 1 | 8 | 0 |
| ஆண் பெண் ரேகை சாஸ்திரம் மூலமும் உரையும் | 2 | 0 | 0 |
| கந்தர் அநுபூதி மூலமும் உரையும் | 1 | 8 | 0 |
| நளவெண்பா மூலம் | 1 | 0 | 0 |
| சிவபராக்கிரமம் | 4 | 0 | 0 |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| சஷ்டி கவசம் மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| கந்தர் அந்தாதி மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும் | 1 | 8 | 0 |
| ஓரெழுத்தந்தாதி மூலமும் விருத்தியுரையும் | 1 | 8 | 0 |
| சிஷ்டாநுபூதி மூலமும் உரையும் | 1 | 8 | 0 |
| ஞானசீவவாதக்கட்டளை விருத்தியுரை | 1 | 8 | 0 |
| 32-கட்டளைகள் சேர்ந்த கட்டளைத்திரட்டு | 3 | 0 | 0 |
| சோதிட பாலபாடம் 1-ம் பாகம் | 1 | 8 | 0 |
| பிரபுலிங்கலீலை | 4 | 0 | 0 |
| மனுதருமசாஸ்திரம் | 5 | 0 | 0 |

## ஸ்ரீ பகவத்கீதை வசனம் கிளேஸ் — விலை ரூபா 5

சகல லோகரக்ஷகனுன திருமால் தானே கிருஷ்ணனுக திருவவதாரஞ்செய்த காலத்தில் “ தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ” என்று சொல்லுகிறபடி அருச்சுனனை வியாஜமாகக்கொண்டு இம்மாநிலத்து மாந்தர்கள் அனைவரும் மகிழ்ந்து உய்யுமாறு வேதாந்தத்தின் ஸாரமாகிய இக் கீதாசாத்திரத்தை பரமகிருபையால் உபதேசித்திருக்கிறார்.

இக் கீதாசாத்திரத்திற்கு வடமொழியில் அநேகம் இருக்கிறது என்று யாவரும் அறிந்த விஷயமே. வடமொழியில் இருப்பதைச் சுத்தமாகத் தமிழ வசனநடையில் ஸ்ரீ சங்கர பாஷ்யத்தைத் தழுவி சென்னை கிறிஸ்தவ கலாசாலை மாஜி தமிழ்ப் பண்டிதர் T. C. **பார்த்தசாரதி அய்யங்கார்** அவர்களால் எழுதப்பட்டு அழகிய இரண்டு படங்களும் சேர்ந்து கடையில் தத்வ நாமங்களும் சேர்த்துள்ளன. ஆகையால் ஒவ்வொருவரும் **தெய்வமகள் விலாச அச்சகத்தில்** அச்சிட்டது என்று பார்த்து வாங்கக் கோருகிறேன். சொற்ப பிரதிகளே இருப்பதால் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள். ரப்பு விலை ரூபா 3.

## விஞ்ஞான தத்துவ ஹஸ்தரேகை சாஸ்திரம்

**யோக சித்தாந்த மகான் சுவாமி வடிவேல் எழுதியது விலை ரூ. 1 0 0**

இந்நூல் பெரும்பாலும் நமது கைகளிலுள்ள ரேகைகளையே அநுபவ சித்தாந்தமாக விளக்கிக்காட்டிப் பலாபலன் சொல்லுகிறது. நமது ஆயுள் அதிர்ஷ்டம் ஐஸ்வரியம் அறிவு ஞானம் தாரம் சந்தானமும், வாழ்க்கையின் சுக துக்காதி எந்த எந்த வயதில் நடப்பதென்பதையும், கைகளின் விரல்களிலுள்ள அங்குலாஸ்திகளில் காணப்படும் நாலுவித லக்ஷண நிலைமைகளை அநேக படங்களின்மூலம் விளக்கிக்காட்டி பலாபலன்கள் எழுதியிருக்கிறது. இதனால் முக்காலத்தையும் சுலபமாக அறியலாம்.

## தெய்வமகள் பதிப்பு

# ஸ்ரீ மகா பக்தவிஜயம்

**[ஐதீகப் படங்களுடன்]**

**(முதற்பாகம்)**

இப்பூவுலகின்கண் ஜனித்த ஆத்மகோடிகள் உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் திருவவதாரஞ்செய்து பகவத்பக்தி இத்தகைய சிறப்பினை யுடையதென்று யாவருக்கும் தெரியக்காட்டி முத்திப் பேற்றினைப்பெற்ற ஜெயதேவர், கபீர்தாசர், துளசிதாசர், நாமதேவர், ஞானேசுரர், குசேலர் என்பவர்களின் சரித்திரங்களை ஆங்காங்கு சமயோசித சுருதிப் பிரமாணங்களுடன் இப்புத்தகத்தில் எழுதப்பட்டு ஐதீகப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா 6 0 0

**(இரண்டாம்பாகம்)**

தமிழ்மக்கள் உணர்ந்துய்தற்பொருட்டு ஆழ்வார் திருநகரி சிங்கப் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களைக்கொண்டு முதல்பாகத்துக்கு முற்றும் பெறாத 5-தாசர்களின் சரித்திரங்களை விரிவாய் எழுதி பூர்த்திசெய்து அதனுடன் 15-தாசர்கள் சரித்திரங்களையும் விரிவாக விசிஷ்டாத்துவித சித்தாந்தத்தின் பாற்படுத்தி எழுதியிருக்கின்றன. விலை ரூபா 6.

---

## முருகன் புகழ்மணி மாலை

இதன் விலை அணா 0-12-0

இதில் முருகப்பிரானுடைய விஷயங்களை அறிந்து பாராயணம் செய்வோர்க்கு, திருமுருகாற்றுப்படை, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் சஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா முதலிய அநேக நூல்கள் சேர்த்து அழகிய 2-கலரில் டைட்டில்பேஜ் அச்சிட்டிருக்கிறது.

---

## பச்சிலை மூலிகை அகராதி

இதன் விலை ரூபா 1 0 0

இப்புஸ்தகம் வைத்தியர்களுக்கும் ஜாலம் செய்பவர்களுக்கும் மாந்திரீகம் செய்பவர்களுக்கும் மிக உபயோகமுள்ளது. ரிஷிகள் முனிவர்கள் சித்தர்கள் தவசிகள் முதலியோர் பசசிலை மூலிகைகளின் பெயர்களை மர்மமாகவும் இரகசியமாகவும் பரிபாஷையில் பாடியுள்ளார்கள். அவைகளைத் தெளிவாகவும் அம்மர்மங்களை விளக்கமாகவும் இதில் எழுதியுள்ளது. ஒவ்வொருவருக்கும் உபயோகமுள்ளது.

---

## சோதிட பிரஞ்ஞான தீபிகை

இதன் விலை ரூபா 4 0 0

இந்நூலானது லக்னமுதல் 12-பாவங்களுமுள்ள பலன்களை ...ஷம் அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் எளிதில் விளக்கிக் கூடிய ஒரு வசன நூலாக இருக்கிறது. இந்நூல் ஒவ்வொரு மனை... திலுமிருந்தால் அவரவர் வாழ்வு நாட்களில் வரும் நன்மை தீ... சுலபமாய்ச் சோதிடர்கள் உதவியில்லாமலே அறிந்து கொள்ள...

---

கிடைக்குமிடம்:—

**சரஸ்வதி புத்தகசாலை,**
175, செட்டியார் தெரு, கொழும்பு.